விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 021 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 25 வியாழக்கிழமை (09.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பயங்கரவாதத் தடைச்சட்டம் அரசின் நிலைப்பாடு என்ன?

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவதனால் பல பிரச்சினைகள் உருவாகுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முற்பகல் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் இந்த விடயம் தொடர்பான கேள்விகளை எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்திருந்தார்.

நாட்டில் காணப்பட்ட குழப்ப நிலை 15

## தேராவில் துயிலுமில்ல காணியை விடுவிக்குக

### விசுவமடுவில் கையெழுத்துப் போராட்டம்



15

### நாளை கலண்டர்

அன்பு வாசகர்களே! நாளைய வலம்புரியில் 2025ஆம் ஆண்டுக்கான **அழகிய தெய்வீக வர்ணக்கலண்டர்** வெளிவரும்.

தவறாது கேட்டு வாங்குங்கள்

## நிரந்தர அரசியல் தீர்வுக்கு அமெ. அழுத்தம் அவசியம்

### அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் தமிழரசுக் கட்சி எம்.பிக்கள்

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஏற்பட அமெரிக்காவின் அழுத்தம் அவசியம் என அமெரிக்கத் தூதுவரிடம் தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## தமிழாராய்ச்சி படுகொலை

### நினைவேந்தல் நாளை

(யாழ்ப்பாணம்)

1974ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு தினம் நாளை முன்னெ 02

## அச்சுவேலியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புலோலி தெற்கு, புற்றளையைச் சேர்ந்த விஜயகுமார் மதிவண்ணன் (வயது-21) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

மாடு ஒன்று குறுக்கே சென்றதன் காரணமாக மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. 15

### வரிக்குறைப்பினை மேற்கொள்க

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் அரசுக்கு எதிராகக் கவனயீர்ப்பு

(கொழும்பு)

அநுர அரசாங்கத்துக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. 15



## சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு கிடையாது

### சபையில் அமைச்சர் வசந்த

(கொழும்பு)

சந்தையில் அரிசித் தட்டுப்பாடு கிடையாது என வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற அமர்வில் பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போது, ஸ்ரீ லங்கா 15

## பஸ்களில் உள்ள அலங்காரங்களை அகற்ற 3 மாத அவகாசம்

(கொழும்பு)

பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள தேவையற்ற உபகரணங்கள் மற்றும் அலங்காரப் பொருட்களை அகற்றுவதற்குத் தனியார் 15

## புலம்பெயர் தமிழர்கள் வடக்கில் முதலிட ஆர்வம்

### அமைச்சர் விஜித ஹேரத்திடம் யாழ்.எம்.பிக்கள்

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்கள் வடக்கில் முதலீடு செய்வது குறித்து ஆர்வத்துடன் உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி, மருத்துவர் பவானந்தராஜா ஆகியோர் வெளிவிவகார 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் விவாதம் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில கிளீன் ஸ்ரீலங்கா தொடர்பில் விவாதமொன்றை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் ஏற்பட்டுள்ள தவறான அபிப்பிராயம் காரணமாக சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

கட்டாயப்படுத்தி இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியாது. இந்த வேலைத்திட்டம் எமக்கும் ஒரு புதிய அனுபவமாக உள்ளது. இதனைப் புரிந்து கொள்வதற்கு சில காலம் தேவைப்படலாம்.

முறையான புரிதல் இன்மையினால் பலரும் இதனை எதிர்ப்பதுடன் மாற்றுக் கருத்துக்களையும் முன்வைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

(ம-7)

# புத்தூரில் இளைஞன் சடலமாக மீட்பு

புத்தூர்ப் பகுதியில் இளைஞன் ஒருவன் சடலமாக நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளார்.

அறிவொளி வீதி, புத்தூர் கிழக்கினைச் சேர்ந்த பால முரளி சஜித் என்னும் 21 வயதுயுடைய இளைஞனே தனது வீட்டில் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளினை மேற்கொண்டதோடு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

சடலத்தினை மீட்ட அச்சுவேலிப் பொலிஸார் பிரேதப் பரிசோதனைகளுக்காக சடலத்தினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ம-7)

# தீவக சிவில் சமூகம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க

## மண்டைதீவில் மீண்டும் சோதனைச் சாவடி

தீவக சிவில் சமூகம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க மண்டைதீவு வீதித் தடை மீண்டும் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

மேலும் ஊர்காவற்றுறையில் மாட்டிறைச்சிக் கடை அமைப்பதற்கான அனுமதியும் நிறுத்தப்பட்டுள்ளது.

(ம-7)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்

## திரு. கந்தையா மதிரூபன்

அவர்கள் 09.01.2025 இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமானிப் பட்டத்தினைப் (M.E.d) பெற்றுக் கொள்வதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மென்மேலும் பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர்:

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

(C-1984)

## நிரந்தர...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமெரிக்கத் தூதுவர் யூலி சங் அவர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் அரசியல் பொருளாதார சவால்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட அமெரிக்காவின் தொடர்ச்சியான பங்களிப்பின் முக்கியத்துவம் தேவையென எடுத்துரைக்கப்பட்டது. அதனுடன் பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

(ம-7)

## தமிழாரா...

டுக்கப்படவுள்ளது.

படுகொலை நடைபெற்று நாளையுடன் 51வது நினைவு நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எனவே நாளை பத்தாம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நான்காவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நினைவுத் தூபிக்கு முன்பாக நடைபெற உள்ள அஞ்சலி நிகழ்விற்கு அனைவரையும் சமுகமளிக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

(ம-7,33)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 02 - 1936



மறைவு 06 - 01 - 2025

## Dr. தம்பிமுத்து சீவரத்தினம்

[ பதிவு வைத்திய உத்தியோகத்தர்(R.M.O) , முன்னாள் தலைவர் – அரியாலை கிழக்கு – கோப்பர் குளம் ஸ்ரீ துரவடிப்பிள்ளையார் ஆலயம் ]

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr. தம்பிமுத்து சீவரத்தினம் அவர்கள் 06.01.2025 திங்கட்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சோதிநாதன் - விசாலாட்சி தம்பதிகளின் மருமகனும் சுந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும் Prof.வசந்தரூபா (விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்), Dr.கஜவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமுதினி (சுற்றாடல் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்), யோகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், நல்லதம்பி மற்றும் சபாரத்தினம், செல்வரத்தினம் (U.K) ஆகியோரின் சகோதரனும் நாகலோசனி(U.K), பரமேஸ்வரி(கனடா), கமலாதேவி, இராஜேஸ்வரி(U.K) காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, திலகவதி, சிவசுந்தரம், சிற்றம்பலம் ஆகியோரின் மைத்துனரும் அபிரா, இனியா ஆகியோரின் ஆருயிர்ப் பேரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி அருளம்பலம், சரஸ்வதி மனோகரன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2025) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

25/12, குசவன்மால்ஒழுங்கை,
அரியாலை

தகவல் :
077 124 9032 சீ.வசந்தரூபா(மகன்)

(C-1981)

# மரண அறிவித்தல்



## அல்பிரட் நவரத்தினம் சின்னத்துரை

(ஓய்வு நிலை தபால் அதிபர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 63, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அல்பிரட் நவரத்தினம் சின்னத்துரை அவர்கள் 08.01.2025 அன்று காலமானார்.

அன்னார் பிரான்சிஸ்கா சின்னத்துரை (ஓய்வு நிலை அதிபர் - பு/ சார்ள்ஸ் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் ஜீன்பிரியதர்சனி (ஆசிரியர் - யா/ மத்திய கல்லூரி), மைக்கல் பிரேமன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மருசலீன் சுரேந்திரன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), இசைச்செல்வி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுக்ஷனா(சப்ரகமுவா பல்கலைக்கழகம்), அல்பிரட் பிரஜித்(IIT), நியோமி நிலுஷனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜெனிபர்(கனடா), ஜேசன் (கனடா) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற ரஞ்சிதமலர் மற்றும் நவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற ஜேசுதாஸன், இம்மானுவேல், தம்பிநாயகம், ஞானப்பிரகாசம், அருமைநாயகம், இரத்தினம் மற்றும் ரெஜீனா(கண்டி), திரேஸா (வறக்காப்பொல), ஜேசுதாசன்(நவாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை 10.01.2025 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நவாலி C.A.C.M சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.63, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-1985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன வைரஸ் குறித்து அச்சப்பட வேண்டாம்

## விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம்

(கொழும்பு)

**பொதுமக்கள் எச்எம்பிவி என்ற மனித மெட்டாப்நியூமோ வைரஸ் தொற்றுக் குறித்து வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை.**



சீனாவில் குறித்த வைரஸ் பரவல் அபாயகரமான நிலையில் இல்லை என அந்நாட்டு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளதுடன் இலங்கையில் இதுவரை எச்எம்பிவி தொற்றாளர்கள் எவரேனும் இனங்காணபடவில்லை எனச் சுவாசநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர், சுவாச நோய் தொடர் பான விசேட வைத்திய நிபுணர் போதிக்க சமரசேகர குறிப்பிட்டார்.

இலங்கை மருத்துவ சங்கத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை சுவாச நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், சமீபகாலமாக சீனாவில் பல வைரஸ் நோய்கள் பரவி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இன்புளுவென்சா, மைக்கோபிளாஸ்மா நிமோனியா போன்ற வைரஸ் தொற்றுக்களுடன், மக்கள் மத்தியில் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ள எச்எம்பிவி என்ற மனித மெட்டாப்நியூமோ வைரஸ் என்ற வைரஸ் வகையும் பரவலாக பரவி வருவதை காணக் கூடியதாக உள்ளது.

எச்எம்பிவி என்பது புதிய வைரஸ் இனமல்ல. 2001 ஆம் ஆண்டு நியூசிலாந்தில் இவ் வகையான வைரஸ் இனம் முதலில் அடையாளம் காணப்பட்டது.

ஆகையால் பொதுமக்கள் இவ்வைரஸ் தொற்றுக் குறித்து வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

நாட்டில் இதுவரை எச்எம்பிவி தொற்றாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

பண்டிகைக் காலத்தில் மக்கள் வெளியிடங்களில் அதிகம் நடமாடுவதால் இவ்வாறான வைரஸ் தொற்றுகள் பரவ வாய்ப்பாக உள்ளது.

விசேடமாக வயோதிபர்கள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்கள், சிறுநீரக நோயாளர்கள், எச்ஐவி நோயாளர்கள் மற்றும் நாட்பட்ட சுவாச நோயாளர்களுக்கும் எச்எம்பிவி வைரஸ் தொற்று ஏற்படலாம்.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் கொவிட் -19 தொற்று காலப்பகுதியில் இலங்கையில் பதிவாகி மரணங்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. காய்ச்சல், இருமல், தொண்டை வலி போன்ற ஏனைய வைரஸ் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்படுவதுடன் நோய் தீவிரமடையும் போது மூச்சுத் திணறல், சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

அத்துடன் தற்போது இலங்கையிலும் இன்புளுவென்சா வைரஸ் சடுதியாக பரவி வருகிறது. ஆகையால் சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவது அவசியம். வைரஸ் காய்ச்சலுக்கு ஆளாகி இருப்பின் முகக்கவசங்களை அணிவது நல்லது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

---

# இலங்கையிலிருந்து சீனாவுக்கு கோழி இறைச்சி

(கொழும்பு)

இலங்கையிலிருந்து கோழி இறைச்சியை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

சீனா சுங்கக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் இடையீட்டில் இலங்கையிலிருந்து கோழி இறைச்சி சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கமைய மேற்கொள்வதற்கு இரு நாடுகளும் உரிய நடவடிக்கை முறைகள் தொடர்பாகப் பரிசோதித்தல், தொற்றுக்காப்பு மற்றும் சுகாதாரத் தேவைகள் உள்ளடக்கிய தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் சீனா சுங்கக் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் அமைச்சுக்கிடையில் கையொப்பமிடுவதற்கு விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

---

# நிபந்தனை அடிப்படையில் 12 இந்திய மீனவர்கள் விடுதலை

(கரணவாய்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர் நிபந்தனையின் அடிப்படையில் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டியதுடன் தடை செய்யப்பட்ட இழுவைப்படகை பயன்படுத்தி கடந்த வருடம் நவம்பர் 11 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட நாகை மாவட்ட மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யும் நடவடிக்கையின் போது கடற்படை உத்தியோகத்தர்களைத் தாக்கி கடமைக்கு இடையூறு விளைவித்தமை, கடற்படை படகை சேதப்படுத்தியமை, எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 மீனவர்களையும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன் போது வழக்கை விசாரித்த நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை கடந்த நவம்பர் 27 ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் வழக்கில் நிபந்தனையுடன் விடுவித்து உத்தரவிட்டிருந்தார்.

ஆனாலும் கடற்படை உத்தியோகத்தர்களைத் தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரினால் மேற்கொண்ட வழக்கில் விளக்கமறியலில் மீனவர்கள் பன்னிருவரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். குறித்த வழக்கு மீண்டும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது வழக்கை விசாரித்த நீதவான் இந்திய மீனவ படகின் ஓட்டிக்கு எட்டு மாத கடூழிய சிறையும் ஏனைய பதினொரு மீனவர்களுக்கு ஆறு மாத கடூழிய சிறைத் தண்டனையையும் விதித்து அதை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனை அடிப்படையில் விடுவித்து உத்தரவிட்டதுடன் படகையும் அரசுடமையாக்கப்பட்டு உத்தரவு பிறப்பித்தார். (6-60)

---

# வழங்கிய வாக்குறுதிகளுக்கு நடந்தது என்ன?

## சஜித் சபையில் கேள்வி

(கொழும்பு)

தற்போதைய அரசு நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ளதாக அரசுடன் தொடர்புடைய அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டாலும், நாட்டில் மனிதாபிமான ரீதியாக ஸ்திரத்தன்மை ஏற்பட வில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் ஆதாரங்களுடன்சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற அமர்வில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவிக்கையில், 'ஸ்திரமான நாடு உருவாகி வருகின்றது என்ற பாராளுமன்றத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வரும் வேளையில், மக்கள் பெரும் ஆணையைப் பெற்றுத் தந்தது ஏலவே காணப்பட்ட சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதற்காகவா எனக் கேள்விஎழுப்பினார்.

மக்கள் சார் அரசு எனக் கூறிக்கொண்டு, மக்கள் சார் செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் அதிகரித்ததாகக் கூறப்பட்ட உர மானியம் இன்னும் உரியவர்களுக்குக் கிடைக்கவில்லை. நமது நாட்டில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இன்னும் இந்த மானியத்தைப் பெறவில்லை. ஸ்திரமான நாடு உருவாகி விட்டது என்றால் 9 ஆயிரம் ரூபாய் மின் கட்டணம் 6 ஆயிரம் ரூபாவாகவும், 3 ஆயிரம் ரூபாய் மின் கட்டணம் 2 ஆயிரம் ரூபாவாகவும் மாறுவது எப்போது? உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் கட ந்த அரசின் பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைத்து, உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து பெறப்பட்ட தொகையை உரிய மக்களுக்கு நிவாரணமாக வழங்கும் திகதியைத் தெரிவியுங்கள்.

சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுக்கு நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்போது குறையும் கடன் தொகைச் சலுகை கிடைக்கின்றது. ஆனால் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் உழைக்கும் மக்களுக்கு குறித்த நிவாரணச் சலுகை கிடைக்கவில்லை.

இன்றும் கூட கடவுச்சீட்டுத் தட்டுப்பாட்டுக்கு உரிய தீர்வை வழங்க முடியாது போயுள்ளது.

இலங்கையில் மிகவும் வெற்றிகரமான வேலைத்திட்டமாக இருந்து வரும் 1990 சுவசெரிய திட்டம், கோவிட் காலத்திலும், நாடு வங்குரோத்தடைந்திருந்த காலத்திலும் தொடர்ச்சியான சேவையை முன்னெடுத்து வந்தது. இன்றைய நிலையில் அதன் பணிப்பாளர்கள் சபை கலைக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்கு உயிரோட்டம் கொடுத்து ஆற்றலை வழங்கியவர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

மீனவ சமூகம், ஓட்டோ சாரதிகள், சுயதொழில் செய்பவர்கள் எரிபொருள் மானியத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால், இதுவரை எதுவுமே நடந்தபாடில்லை.

இவை இவ்வாறு இருக்க பாராளுமன்றத்தில் ஸ்திரத்தன்மையைப் பற்றி பேசுவது எங்கனம்? தற்போது ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து, தொழில் துறைகள் மூடுண்டு, வறுமை அதிகரித்து, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் காணப்படும் போது, நீங்கள் கூறும் ஸ்திரத்தன்மையால் நாட்டுக்கு எந்தப் பலனும் ஏற்படவில்லை.

இந்நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரச வளங்கள் போதுமானதாக இல்லை. அரசுக்கு மட்டுமல்ல, ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து தீர்க்க வேண்டிய விடயமாகும். சிவில் சமூகம் மற்றும் சர்வதேச அமைப்புக்களைக் கூட ஒன்றிணைத்துக் கொண்டு, அனைவரினதும் உதவியுடன் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2025



**சுக்கிரனை இராசிநாதனாகக் கொண்ட துலா இராசி அன்பர்களே!**

இந்த ஆண்டு நீங்கள் எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றியுடன் முடியும். சிறிய அளவு முயற்சிகள்கூட பெரிய பலனைத் தரும். திருமணம் போன்ற சுப காரியங்கள் சுலபமாக நடக்கும்.

வழக்குகளை சம்பந்தப்பட்டவர்களே திரும்பப் பெறுவார்கள். உங்களின் பழக்க வழக்கங்களில் புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள். குடும்பத்தாருடன் இனிய சுற்றுலா சென்று வருவீர்கள். நேர்வழியில் சிந்தித்து உங்களின் காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள்.

**பொருளாதாரம்:** சனி பகவானின் ஆதிக்கத்தால் இதுவரை இருந்து வந்த பிரச்சினைகள் அகலும். சுப நிகழ்ச்சிகள் செய்யும் சூழ்நிலை உண்டாகும். அதற்கான செலவுகளை சமாளிக்கவும் முடியும்.

**ஆரோக்கியம்:** உடல் நிலையில் இருந்து வந்த கஷ்ட சூழ்நிலை நீங்கும். ஆரோக்கியத்திற்காக இதுவரை செய்து வந்த செலவு நீங்கும்.

**உத்தியோகத்தர்கள்:** உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பீர்கள். அதனால் கட்சி மேலிடத்தின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். உங்களின் வேலைகளை சிரமம் இல்லாமல் செய்து முடிப்பீர்கள். தொண்டர்களின் ஆதரவும், கட்சி மேலிடத்தின் ஆதரவும் இருப்பதால் உங்களின் எண்ணங்கள் நிறைவேறி புதிய பொறுப்புகளைப் பெறுவீர்கள். ஆனாலும் மாற்றுக் கட்சியினர் உங்கள் பேச்சில் குறை காண முயல்வார்கள். எனவே அநாவசிய விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

**கலைத்துறையினர்:** கலைத்துறையினர் சுமாரான வாய்ப்புகளையே பெறுவீர்கள். மற்றபடி உங்களின் பெயரும், புகழும் உயரும். சக கலைஞர்களின் நன்மதிப்புக்கு ஆளாவீர்கள். சக கலைஞர்களுடன் நல்ல உறவை வைத்துக்கொள்வீர்கள். கடன் வாங்கி செலவழிக்கும் நிலை உண்டாகும். தொழில் ரீதியாக உங்களை புறந்

பேசுவது நல்லது. பணவரத்து இருக்கும். எதிர்பார்த்த காரியங்கள் நடக்க சிறிது கால தாமதம் ஆகலாம். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும்.

**சுவாதி:** இந்த ஆண்டு குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொற்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். நிதானமாக பேசுவது நன்மை தரும்.

## எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றியுடன் முடியும்

பொருளாதாரம் படிப்படியாக உயரும். உடல் உபாதைகளுக்கு மாற்று சிகிச்சை முறைகளை மேற்கொள்வீர்கள். அசையாச் சொத்துக்களை வாங்குவீர்கள். மழலைச் செல்வம் கிடைக்கும். மனதிற்கினிய தொலைதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். ஆனாலும் புதியவர்களுடன் கூட்டு சேர வேண்டாம். மேலும் உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் உங்களின் ரகசியங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம். மற்றபடி சமுதாயத்தில் புகழ் பெற்ற பதவிகள் உங்களைத் தேடி வரும். உங்களின் அந்தஸ்து உயரும். சகோதர, சகோதரிகளுடன் விட்டுக் கொடுத்து நடந்துகொண்டு உங்களின் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். அநாவசியச் செலவுகளுக்காக கடன் வாங்க வேண்டாம். வரவுக்குத் தகுந்த செலவுகளைச் செய்யவும். மேலும் மனதில் எதையோ இழந்துவிட்டது போன்ற உணர்வு தோன்றும்.

**குடும்பம்:** குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்த உறவினர்கள் மறுபடியும் ஒன்று சேர்வார்கள். வருமானம் படிப்படியாக உயரும். பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவீர்கள். கடினமான உழைப்பை மேற்கொள்வீர்கள். உங்களின் போட்டியாளர்களை திடமான நம்பிக்கையுடன் வெற்றி கொள்வீர்கள். நூதனத் தொழிலில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடுவீர்கள். உங்களின் செயல்களில் வேகத்துடன், விவேகத்தையும் கூட்டிக் கொள்வீர்கள். உங்களுக்கென்று ஒரு தனி பாணியை வகுத்துக் கொள்வீர்கள். உங்களுக்கு எதிராக தொடரப்பட்டிருந்த அவதூறு

நன்மதிப்பைப் பெறுவீர்கள். கடின உழைப்பை தாரக மந்திரமாகக் கொண்டு உழைக்கவும். சக ஊழியர்களிடம் நல்ல முறையில் பேசிப் பழகவும். சிலர் உங்களுடன் பகைமை பாராட்டுவார்கள். ஆனாலும் வருமானத்திற்குக் குறைவு இருக்காது. அலுவலக ரீதியான பயணங்களால் நல்ல அனுபவத்தைப் பெறுவீர்கள். அலுவலகத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**வியாபாரிகள்:** வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். திட்டமிட்டபடி செய்யும் செயல்களில் வெற்றி காண்பீர்கள். பழைய கடன்களை அடைத்த பிறகே புதிய கடன்களைப் பெற முயற்சி செய் யவும். மற்றபடி வாடிக்கையாளர்களின் வருகை நல்லமுறையிலேயே இருக்கும். ஆனாலும் புதிய முதலீடோ அல்லது விரிவாக்கலோ இருந்தால் தகுந்த ஆலோசனைகளைப்பெறவும்.

**பெண்கள்:** பெண்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் குறைவு வராது. உங்களின் பிரார்த்தனைகள் வீண் போகாது. பணவரவு அதிகரிக்கும். குழந்தைகள் உதவிகரமாக இருப்பார்கள். சுபகாரியங்கள் நடத்துவதில் ஏற்பட்ட தடைகள் விலகும். உற்றார், உறவினர்களுடன் ஒற்றுமை தொடரும். அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் சிறிது மந்த நிலை காண்பார்கள்.

**அரசியல்வாதிகள்:** அரசியல்வாதிகள் பொதுச்சேவையில் அனுகூலமான திருப்பங்களைக் காண

தள்ள நட்புடன் பழகியவர்களே முயற்சி செய்வார்கள். கடின உழைப்பை செயற்படுத்தினால் மட்டுமே முன்னேற முடியும்.

**மாணவர்கள்:** மாணவர்களின் படிப்பில் சிறு தடங்கல்கள் ஏற்பட்




டாலும் பெற்றோரின் உதவியுடன் நன்றாகப் படித்து வெற்றி பெறுவீர்கள். சோம்பேறித்தனத்தை தள்ளி வைத்துவிட்டு ஆசிரியர் நடத்திய பாடங்களை அன்றைய தினமே படித்து மதிப்பெண்களை அள்ளுங்கள்.

உடற்பயிற்சி, யோகா போன்றவற்றை மேற்கொண்டு உடலையும், மனதையும் நன்றாக வைத்துக்கொள்ளுங்கள். மருத்துவம், இஞ்சினியரிங் கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் படிப்பில் சிறந்த கவனத்துடன் செயற்பட்டு தேர்ச்சி பெறுவார்கள். இது தொடர்பான கல்வி நிறைவு செய்தவர்கள் உடனடியாக வேலை வாய்ப்பு பெறுவார்கள். நண்பர்களால் உதவி உண்டு.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும் அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தை குறைத்து

பணவரத்து திருப்தி தரும். எதிர்பார்த்த தகவல்கள் வரும். அக்கம் பக்கத்தினருடன் கவனமாக பழகுவது நல்லது. வீண்வாக்குவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் நன்மை தரும். நற்பெயரும் கீர்த்தியும் வந்து சேரும். பொருளாதார வசதிகள் பெருகவும் வாய்ப்பான காலமிது. சிலருக்கு புதிய சொத்துக்கள் வாங்கவும் பாக்கியம் ஏற்படும்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு புதிய வாய்ப்புகள் தேடி வரும். அவற்றை பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெற உழைக்க வேண்டும். பணவரவு உண்டாகும். எதிர்பார்த்த நற்செய்திகள் தேடி வரும். பதவி உயர்வு கிடைக்கும். தேவையில்லாத பேச்சுவார்த்தைகளை தவிர்ப்பது நல்லது.

பதவி உயர்வால் மக்களுக்கு நன்மைகள் செய்து மனம் மகிழ்வீர்கள். பண விடயங்களை கவனமாக கையாள்வது நன்மை தரும். விற்பனையின் போது கவனம் தேவை. சக ஊழியர்களுடன் பழகும் போது கவனம் தேவை. வேலைகள் எளிமையாக தோன்றும். விருந்து, கேளிக்கைகளில் கலந்து கொள்வீர்கள். நிதானமாக செயற்படுவது நன்மை பயக்கும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் அம்மன் கோவிலுக்குச் சென்று 16 முறை வலம் வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி

**அதிஷ்ட எண்கள்:** 2, 5, 6

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலியான குறுஞ்செய்திகளுக்கு தகவல் வழங்குவதை தவிருங்கள்

## தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)
சமூக வலைத்தளங்கள் மூலம் அனுப்பப்படும் போலியான குறுஞ்செய்திகளுக்கு உங்களின் தனிப்பட்ட தகவல்களை வழங்குவதை தவிர்க்குமாறு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஊடாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு 50,000 ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக சமூக ஊடகங்களில் போலியான குறுஞ்செய்திகள் வெளியிடப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.இதன்படி, இது தொடர்பான குறுஞ்செய்திகளுக்கு தமது தனிப்பட்ட தகவல்களை வழங்குவதை தவிர்க்குமாறு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா.பத்திரன தெரிவித்துள்ளார். (நி)

# சிதம்பரத்தில் சிவமுருகரை சிவபதம் தந்த சோமற்கந்தத்திருவுருவம் தனித்தோணியில் கரை சேர்ந்து வீடும்பேறும் மகப்பேறும் திருவருளை கும்பாபிஷேகம் தரிசிப்போம்- வணங்குவோம்

ஈழத்துச் சிதம்பர புராணம்

**சத்தியுமை யருள் வடிவஞ் சார் வமு மவ்வடிவஞ்**
**சித்திவே லிளமுருக னவ்வடிவஞ் சிந்தித்தால்**
**எத்திசையு மெவ்வுலகு மியங்கிவரு மன்னுயிர்க்கு**
**முத்தியின்பந் தந்தருளு மூர்த்தியென முடிந்திடுமால்**

அருள்வெளிப்பாட்டைக்காட்டும் அருள் சக்தியோடு சேர்ந்த சிவமும் வேலாயுதத்தையுடைய குழந்தை முருகனும் அருள் வெளிப்பாட்டையும் முத்தியின்பத்தையும் கொடுக்கும் சோமற்கந்த மூர்த்தியை கும்பாபிஷேகம் கண்டு வழிபடுவோம்.

சிவமுருகர் சிவபக்தியிற் சிறந்து. சோமாற்கந்த பெருமானை தாம் கட்டுவித்த சிவன் கோவிலிற் தாபிக்க விரும்பினார். அடியவர்களுக்கு திருவருளும், வீடு பேறருளவல்லவன் எண்ணங்கொண்டார் அழகிய சிதம்பரத்திற்கு தனது இளைய மகன் சண்முகத்தாரை தம்முடன் கூட்டிக்கொண்டு சென்று தில்லைக் கூத்தனை, தோத்திரங்கள் பாடியும், கசிந்து உருகியும், பலவாறு துதித்து. அழகிய சிற்பக்கலையில் வல்ல சிற்பிகளிடம் சென்று. சோமாற்கந்த அருள்வடிவத்தை வார்த்துத் தரும்படி கூறி அச்சிற்பிகள் மதித்துக் கூறிய அளவு பொன்னைக் கொடுத்தார்கள் சிவமுருகனும் அவர் மகனும்.

சிற்பாசிரிகள் மேலான பரம்பொருளை மனத்தில் எண்ணிக்கொண்டு செம்பை உருக்கி வார்த்து கருமிகு அற்பதமாக அமைந்தாலும் சிதைவுண்டாவதைக் கண்டு கலக்கம் உற்றவர்களாக, மீளவும் அச் சிற்பிகள் இறைவனையும் வணங்கி ஊக்கத்துடன் திரும்ப உருக்கி வார்த்து அமையாத நிலையில் எல்லாம் திருவருளின் செயல் என அறிந்த சிவமுருகர் தனது கடுக்கன்களைத் திருப்பணியில் சேர்த்து மூன்றாம் முறை சேர்த்துருக்கிய போது கருச்செல்வனே அமைந்துள்ளது என்று சிற்பர்கள் சிவமுருகரிடம் செவியில் சாய்க்க, நற் செய்தி கேட்டு ஆச்சரியப்பட்டவராய் வெம்பி அழுது அம்மையப்பா என்று புலம்பி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து பெறுதற்கரிய பேற்றைக் பெற்றுக் கொண்டேன் எனச்சொல்ல சிவபதமடைந்தார்.

**சிவமுருகர்**

தில்லைக்கூத்தனை பிரார்த்தித்து தோத்திரம் பாடி சிறிது சிந்திப்போம்.

இறைவனை கொடிய பிறவியின் வேரை அறுத்து, என் உள்ளத்தை விட்டு நீங்கா வரம் தரவும். அதனால் கனவில் எழுந்தருளி அருளை மிகுதியாய் தந்தாய், முத்தி இன்பத்தை தரும் மணியே சிந்தாமணி விளக்கே அடைக்கலம் புகுந்தவர்களை விட்டு நீங்காதவர்களுக்குத் தஞ்சமாய் நிற்பவனே, சிறியேன் உய்வதற்கு ஒரு வழியைக் காட்டியருள வேண்டும் எனவும், குறையாத பேரின்ப பெருவாழ்வை அருளுகின்றீர், கருவிலே உதிக்கின்ற பிறவியாகிய கட்டினை அறுத்து தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தந்து அடியேனையும் காத்தருள வேண்டும் என பிரார்த்தனை செய்தார்.

சிதம்பரத்தில் இறைவன் கைப்பட எழுதிய திருவாசகப் பொருள்யாது என மாணிக்கவாசகரைக் கேட்க இறைவனைக்காட்டி அவர்தான் பொருள் என இறைவனுடன் இரண்டறக் கலந்த வண்ணம் அம்பலவி முருகர் ஆகிய சிவமுருகர் தனது இறுதியாக உள்ளப் பொருளாகிய கடுக்கணைக் கொடுத்து இறைவனுடன் கலந்தார். தேவர்களும் வியப்படைந்தனர். தில்லைநகர் சிவ அடியார்களும் இச்செய்தி அறிந்து இத்தகைய சிவனடியார்களையுடைமையாக்க ஈழமும் சிவபூமி யாகும் என்றார்கள்.

குற்றமற்றவர்களும் சிற்பர்களும் மகனாகிய சண்முகத்தாரும் பார்த்து திகைத்தவராய் உண்மையான சிவ வாழ்வு வென்றது.

சிவமுருகர் கடவுளே மெய்ப் பொருளென்றும் அவரது திருவடிகளைச் சேர்வதாலே தெய்வீக வாழ்வும் தொண்டும் எனவும், சோமாற் கந்தத் திருவுருவம் நன்றாக அமைந்ததென்று அறிந்ததும் ஆனந்த பரவசராய்ச் சிவபதமடைந்தார்.

சண்முகத்தார் தந்தை சிவமுருகரின் தீக்கடன், நீர் கடன் உபசாரத்தைச் செய்து தில்லையில் சில நாள் இருந்த பின்னர் எல்லோருக்கும் தமக்குச் செய்த உதவிகளை பாராட்டி நன்றி கூறி, சோமாற்கந்த வடிவத்தைத் தம்மோடு கொண்டு. பறங்கிப் பேட்டை துறைமுகத்தின் வழியாக ஒரு தோணியில்ஏற்றிக் கொண்டுவிட்டபின், சண்முகத்தாரும், நன்னெறியில் உண்மையான ஓர் நண்பருடன் ஏறிவரும் போது, உண்டான தொரு கொடிய புயற் காற்றினால், தோணியும் நீருள்ளே மூழ்கியது.

சண்முகத்தாரும்; நண்பரும் அலைகளால் அலைக்கப் பட்டு, மரக்குற்றி ஒன்று சிவன் திருவருளினாற் கிட்ட வந்து சேர கையினாற் பிடித்து இரு நாட்கள் அலைந்து மூன்றாம் நாள், அதிராம் பட்டினக்கரையிற் சேர்ந்தார்கள்.

அவ்வூர் மக்கள் உறவினர்போல் உதவி செய்தார்கள்.

சிவபெருமானை அவ்விருவரும் துதித்து அவ்வூர் மக்களுக்கு தங்களது முழுவிபரம் எடுத்துக் கூறி, ஒரு தோணியில் ஏறி, அவ்வூர் மக்களுக்கு நன்றியைத் தெரிவித்து ஊர்காவற்றுறை வந்து காரைநகர் வந்து சேர்ந்தார்.தனித்தோணியில் நீங்கள் முன்னர் அனுப்பி வைத்த சோமாற்கந்த வடிவம், ஒரு வித தீங்கு மல்லாமல் துறைமுகம் வந்ததைக் காட்ட சண்முகத்தார் மகிழ்ச்சியடைந்தார். தனது இல்லம் சென்று சேர்ந்தார்.

சண்முகத்தார் தில்லையில் சிவபதமடைந்த தந்தையாருக்கு சிவபதமடைந்த நாளில் அறுசுவையுடன் அன்னதானம் செய்த பின் தனது சிவத்தொண்டை ஊர் மக்களுடன் பெரியார்களுடன் சிந்தித்து ஒன்று கூடி செய்ய வேண்டிய திருப்பணிகள் எல்லாவற்றையும் கோவைப் படுத்திச் சிவசிந்தனையுடன் மேற்கொண்டார்.

திருவருள் வடிவமான சோமாற் கந்த மூர்த்தியைத் திண்ணபுரத்துச் சிவன் கோயிலிற் பிரதிட்டை செய்து காரைநகர் மக்களையும் அன்புடன் யாவரையும் வழிபட தொண்டு புரிந்து தாமும் அன்புக்கு வழி சமைத்தார்.

திருக் கைலாச மலையிலே திருமணக் கோலத்துடன் வீற்றிருந்த சிவபெருமானும் உமையம்மையாரும். சரவணப் பொய்கையிற் தோன்றிய குழந்தை அருள் மிகு முருகன் சோமாற் கந்த மூர்த்த திண்ணபுரத்திற்கும். நாட்டுக்கும் இலக்குமீகாரம் பொலிந்து விளங்குமாறும் முத்திப் பேற்றையடைய விரும்புகின்றவர்கள், வீடு பேறு தருவதும், மகப்பேறு விரும்பியாவாராயினும் பூசித்தால் மகப் பேற்றும் அடைவர்.

சோமாற்கந்தத் திருவுருவத்திற் பொருந்தியிருப்பவரான. முக்கண் எண் குணத்திறைவனுக்கு வணக்கம் அந்தரி சுந்தரி அம்பிகை எனும் சிறப்பு நாமம் போற்றப்படும் இறைவிக்கு வணக்கம் செந்தமிழின் திருப்புகழ் இனிமையை முற்றாக உண்டு சுவைத்த முருகப் பெருமானுக்கு வணக்கம்.

**ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் தரிசித்து நம் முன்னோர் காட்டிய பாதையில், அறநெறி, அன்பு நெறியில், வாழ்ந்து மண்ணில்நல்ல வண்ணம் வாழ்வோமாக.**

சுத்தமான மனச் செல்வத்தையுடைய செம்மணச் செல்வி. பாவ சிந்தனையும் நீக்கிய வந்தி இன்புறு அமுது செய்த பிட்டும் கூலியாளாக வந்த சொக்கராகிய எம் பெருமானுக்கு அன்புடன் நைவேத்தியம் வைத்த மடாலயத்தில் அன்புடன் 09.01.2025 திருவெம்பாவை ஆறாவது நாளாகிய இன்று திருவாதவூரடிகள் புராணம் காட்டிய சிவவழியில் பெறலாம்.

(தி-1979)



க.கு.க.சிவபாலன்
போசகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.

# இராசிபலன்

09.01.2025
மார்கழி 25, வியாழக்கிழமை
தசமி பிற்பகல் 12.16 மணிவரை
பரணி பிற்பகல் 3.11 மணிவரை

சுபநேரம் 8.02-9.32 மணிவரை
இராகுகாலம் 2.02-3.32 மணிவரை
கார்த்திகை விரதம்

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை.

வளவன்


மேஷம்
நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், வேலைச்சுமை கூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


ரிஷபம்
பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்,பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


மிதுனம்
வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், உடல் நலனில் கவனம் தேவை.


கடகம்
கண்ணியம் மிக்க ஒருவரின் சநதிப்பு இடம் பெறலாம், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எண்ணங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


சிம்மம்
மறைமுக எதிர்ப்புகள் அகலும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ரோக பயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.


கன்னி
ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


துலாம்
பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


விருச்சிகம்
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


தனுசு
மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் காரியம் சாதிப்பீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.


மகரம்
வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


கும்பம்
எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், பொன்னான நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புண்டு.


மீனம்
பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

தன்னைத் தானே வெல்பவன் உண்மையான வீரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின்(ஜே.பி) நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு ஊர்வல பவனி நேற்று முன்தினம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நூற்றாண்டு மலரும் வெளியிடப்பட்டது.

## இணுவில் பொது நூலக சிறுவர்திறன் விருத்தி மைய கலைவிழாவும் பட்டமளிப்பும்

(யாழ்ப்பாணம்)

சுவிஸ் அமைப்புக்குழுவின் அனுசரணையில் இணுவில் பொதுநூலகம் சிறுவர் திறன் விருத்தி மையம் நடத்தும் கலைவிழாவும், பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக வட மாகாணகல்வித் திணைக்கள முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் த.முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரி டிப்ளோமா கற்கை நெறிகள் பகுதித் தலைவர் பொ.ஜெனார்த்தனன், மென்பொறியியலாளர் இ.ராகவன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக இணுவில் கல்வி அபிவிருத்தி குழுமக் காப்பாளர் ந.சச்சிதானந்தன், ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி. தவராணி சிவப்பிரமம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாழ்த்துரைகளை சிறுவர் திறன் விருத்தி மைய அதிபர் திருமதி.கமலராணி கிருஷ்ணபிள்ளை, இணுவில் பொ.நூ.போசகர், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராஜா மற்றும் இணுவில் பொ.நூ.போசகர் இரா. அருட்செல்வம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அதனையடுத்து சிறுவர் திறன் விருத்தி மைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பட்டமளிப்பு விழா நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நன்றி உரையினை இணுவில் பொ.நூ பொருளாளர் ம.ஜெயகாந்தன் நிகழ்த்தவுள்ளார். (6)

## கரையொதுங்கிய மிதவை



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மணற்காடு கடற்பகுதியில் மிதவை ஒன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் குறித்த மிதவை கடலில் மிதந்துவருவதை அவதானித்திருந்தனர்.

அதனையடுத்து அதிகாரிகளுக்கு மீனவர்கள் தெரியப்படுத்தியிருந்தனர்.

சிவப்பு நிறமுடைய கூம்பு வடிவிலான மிதவை ஒன்று கரையொதுங்கி இருப்பதை அவதானிப்பதற்கு அதிகளவான மக்கள் பார்வையிட வருகின்றனர். (6)

## கற்பகத்தரு அழிப்பு பார்வையிட்ட அதிகாரிகள்

(சாவகச்சேரி)

பளை -முகமாலைப் பகுதியில் பனை மரங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்படுவது தொடர்பாக மக்களின் முறைப்பாடுகள் பனை அபிவிருத்திச் சபைக்கு கிடைத்திருந்த நிலையில் சம்பவ இடத்திற்கு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பனை அபிவிருத்தி சபைத் தலைவர் வி.சகாதேவன் உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர். (6-30)

## போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞனே, சாவகச்சேரி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அந்நபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

## யாழ்.பல்கலையில் சர்வதேச சட்ட மாநாடு

### எதிர்வரும் 25,26 ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சட்டத்துறையானது இந்தியாவின் சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது தடவையாகவும் யாழ்.சர்வதேச சட்ட மாநாட்டை எதிர்வரும் 25 ஆம் ,26 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

யாழ்.சர்வதேச சட்ட மாநாடானது மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலைவரை இடம்பெறவுள்ளது.

செயற்படல், நிலைமாற்றம், நிலைத்திருப்பு என்னும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதிகள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் பலர் கலந்து கொண்டு மாநாட்டின் தொனிப்பொருளை சார்ந்ததான பல்வேறு விடயப்பரப்புக்கள் பற்றி உரையாடவுள்ளனர்.

மாநாட்டின் ஓரங்கமாக மாற்றுப் பிணக்குத் தீர்வு முறைகள் பற்றிய குறிப்பாக மத்தியஸ்தம் தொடர்பானசிறப்பு அமர்வு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 4 .30 மணி முதல் 6.30 மணி வரை யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற வுள்ளது.ஆர்வமுள்ளவர்கள் பங்கு பற்றி பயன்பெற்றுக்கொள்ளுமாறு மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அதேவேளை இந்நிகழ்வில் இந்தியாவினைச் சேர்ந்த நிபுணர்கள் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## தடுப்பு வேலிகளுடன் மோதி விபத்துக்குள்ளான ஆட்டோ



(யாழ்ப்பாணம்)

வசாவிளான், குட்டியப்புலம் பகுதியில் இராணுவத்தினரின் தடுப்பு வேலிகளைத் தகர்த்துக் கொண்டு உள்ளே சென்ற முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானது.

யாழ்.வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்று அதிகாலை வேளை பயணித்த முச்சக்கர வண்டியே இவ்வாறு இராணுவத்தினரின் தடுப்பு வேலிகள், அலங்காரத் தொட்டிகளைத் தகர்த்து உடைத்துக்கொண்டு உள்ளே சென்று விபத்துக்குள்ளானது.

இதன்போது காவல் பணியில் இருந்த இராணுவச் சிப்பாய் பதற்றமடைந்து ஓடிச் சென்றார்.

தெரு நாய் ஒன்று ஓட்டோவின் குறுக்கே சென்றபோது அதனை விலகிச் செல்ல முற்பட்ட சமயமே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் முச்சக்கரவண்டி கடும் சேதமடைந்தது. எனினும், அதில் பயணித்தவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்துங்கள்!

## புதிய அரசு மீனவர்களைப் பாதுகாக்கும் என நம்புகின்றோம்

## ரவிகரன் எம்.பி



(வவுனியா)

**அதிகரித்துள்ள இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகை மற்றும் அதிகரித்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் வடபகுதி மீனவர்களின் பருவகால இறால்பிடி பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகையினையும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.**

அவ்வாறு அரசால் கட்டுப்படுத்தமுடியாதெனில், அந்தப் பொறுப்பை மீனவமக்களிடம் ஒப்படைக்குமாறும் தெரிவித்துள்ளார்.

வரவுசெலவுத்திட்டத்தின் பொருளாதார விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வடபகுதியில் சட்டவிரோத கடற்றொழிலால் மக்கள் முற்றுமுழுதாக நசுக்கப்படுகின்றார்கள். மக்கள் அவதிப்படுகின்றார்கள். எனவே இந்த விடயத்தை புதிய அரசின் கவனத்திற்காகக் கொண்டுவருகின்றேன்.

முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இலட்சக்கணக்கான மீனவர்கள் வட பகுதியில் உள்ளனர். இவர்களுடைய வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது.

கடந்த சில வருடங்களாக இறால் பருவகாலத் தொழில் செய்வதற்கு இந்திய இழுவைப் படகுகள் முட்டுக்கட்டை போடுகின்றார்கள். முல்லைத்தீவின் கடற்கரையோரங்களுக்கு இந்திய இழுவைப்படகுகள் வருகை தந்து இழுவைமடி, சட்டவிரோத தொழிலைச் செய்வதால் எமது மீனவர்களின் தொழில்கள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

எமது மீனவர்கள் சுதந்திரமாக எமது கடலில் மீன்பிடிக்க வேண்டும். தங்களின் வாழ்வாதாரத்தை அவர்கள் பார்க்க வேண்டும். சட்டவிரோத தொழில்கள் யார் செய்தாலும் தடுக்கப்படவேண்டும். தண்டனை கொடுக்கப்பட வேண்டும்.

எல்லை தாண்டி எமது கடற்பரப்புக்குள் அந்நியப் படகுகள் நுழைவதை கடற்படை தடுக்க வேண்டும். இதனை கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

மேலும் புதிய அரசானது பாகுபாடு காட்டாமல் எமது மீனவ மக்களைப் பாதுகாக்கும் என்று நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8-299)

## சுவாச நோய்களால் பாதிப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் சமீப காலமாக சுவாச நோய்களால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் ஆஸ்துமா மற்றும் காசநோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுவாசநோய் நிபுணர் வைத்தியர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் நோய்கள் பரவி வருவதனால் குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

லங்கா மஹறால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(2917)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

கண்ணீர் அஞ்சலி

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் வணிகபாட ஆசிரியர்
திரு. ப. பாலகிருஷ்ணன் அவர்களின் பாசமிகு மாமனார்
அமரர். ஆறுமுகம் துரையப்பா
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
தோற்றம் : 1938.11.04 மறைவு : 2025.01.08
அவர்களின் மறைவால் துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
(2964)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

யாழ் மாபெரும் உயர்கல்விக் கண்காட்சி
JAFFNA EDUCATION FAIR 2025
Your Future Begins Here...
5TH EDITION
கனடாவிற்கு STUDENT VISA பெற விரும்புகிறீர்களா?
FREE! VISA CONSULTATION & COUNSELLING

11th & 12th JANUARY 2025
9.00 am to 5.00 pm
VALAMPURI HOTEL JAFFNA
அனுமதி இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!
A·P·I·I·T StudyGlobal BCAS NORTHERN UNI NEW ZEALAND ESOFT
SCOT CAMPUS ICS வலம்புரி EVOLUTION
விபரங்களுக்கு அழையுங்கள்
0775656633
0722600620
(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கி மோதல் வெடிக்கு

## ட்ரம்ப் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

**மத்திய கிழக்கு அனைத்திலும் மோதல் வெடிக்கும் என்று டொனாலட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

எதிர்வரும் 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்கவுள்ள நிலையில் மேற்குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

தான் பதவி ஏற்பதற்குள் காசாவில் வைத்திருக்கும் பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்காவிட்டால், மத்திய கிழக்கில் மோதல் வெடிக்கும் என்றும் இது ஹமாஸ்க்கு நல்லதல்ல, என்றும் தெரிவித்தார்.

மேலும் டென்மார்க்கில் உள்ள கிரீன்லாந்தை கைப்பற்ற இராணுவத்தைப் பயன்படுத்துவதையும் ட்ரம்ப் நிராகரிக்கவில்லை. அத்துடன் பதவியேற்றதும் மெக்சிகோ வளைகுடா, அமெரிக்க வளைகுடா என்று மாற்றப்படும் என்றும் தாங்கள் அவர்களுக்கு உதவி களை வழங்குவதால் அந்த பெயரே பொருத்தமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## சவுதி அரேபியாவில் கனமழை வெள்ளக்காடான மக்கா, மதீனா



(ஜெத்தா)

மக்கா, மதீனா மற்றும் ஜெத்தாவில் கனமழை பெய்துள்ளது.

அதிகபட்சமாக அல்-ஷாஃபியா எனும் பகுதியில் 49.2 மிமீ மழை பதிவாகியுள்ளது.

பாலைவன நாடான சவுதி அரேபியாவில் பெய்த கனமழையால் பல இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது.

புனித நகரங்களான மக்கா, மதீனா மற்றும் ஜெத்தாவில் பெய்த அதி கனமழையால் சாலைகளில் வெள்ளம் தேங்கி போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (நி)

## எவரெஸ்ட் சிகரத் சுற்றுலாப் பயணிகளுக்

(பீஜிங்)

எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாம் அமைந்திருக்கும் திங்ரி பகுதியிலும் நில அதிர்வு ஏற்பட்டதால் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற சுற்றுலாப் பயணிகளுக்குச் சீன அரசு தடை விதித்துள்ளது.

சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்தில், நேபாள எல்லையையொட்டி ரிக்டர் 6.8 அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் காரணமாக உலகின் மிக உயரமான சிகரமாக விளங்கும் எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாம் அமைந்திருக்கும் திங்ரி பகுதியிலும் நில அதிர்வு ஏற்பட்டது.




இந்த நிலநடுக்கத்தால் திங்ரி முகாமில் இருந்த சுற்றுலா பயணிகள் மற்றும் சுற்றுலா வழி காட்டிகள் ஆகியோருக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

அதே சமயம், திங்ரியில் அமைந் துள்ள சீன அறிவியல் வளிமண்டல மற்றும் சுற்றுச் சூழல் ஆராய்ச்சி நிலையத்தில் நில நடுக்கத்தால் சிறிது நேரம் மின் தடை ஏற்பட்டதாகவும், அதுதவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு



கில்

கும்!



# கலிபோர்னியாவில் காட்டுத்தீ

## 30,000 குடியிருப்பாளர்கள் வெளியேற்றம்



(வோஷிங்டன்)

கடுமையான காட்டுத் தீ காரணமாக லாஸ் ஏஞ்சல்ஸ் குடியிருப்பாளர்கள் சுமார் 30,000 பேர் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை தமது குடியிருப்புக் களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். கடற்கரை நகரங்களான சாண்டா மோனிகா மற்றும் மனிபு ஆகியவற்றுக்கு இடையே பசுபிக் பாலிசேட்ஸ் பகுதியில் குறைந்தது 2,921 ஏக்கர் தீக்கிரையாகியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீட்டிக்கப்பட்ட வறண்ட காலநிலையைத் தொடர்ந்து வலுப்பெற்றுள்ள பலத்த காற்றானது தீப்பரவலை மேலும் அதிகரிக்கலாம் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தீப்பரவலை கட்டுப்படுத்தும் முயற்சியில் விமானப் படை வீரர்களும் தீயணைப்பு வீரர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.



காயங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை எனக் கூறிய கலிபோர்னியாவின் ஆளுநர் கவின் நியூசோம், எனினும் பல கட்டடங்கள் ஏற்கனவே தீக்கிரையாகி விட்டதாக குறிப்பிட்டார்.

அதேநேரம், அரை மில்லியன் மக்கள் மின்வெட்டுப் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல மாதங்களாக கணிசமான மழை பெய்யாத மலைப்பாங்கான பகுதிகளில் மணிக்கு 100 மைல் (மணிக்கு 160 கி.மீ.) வேகத்தில் வீசும் சூறாவளி காற்று பல நாட்களுக்கு நீடிக்கும் என்று வானிலை முன்னறிவிப்பாளர்கள் கணித்துள்ளனர்.

இதனிடையே பசுபிக் பாலிசேட்ஸ் பகுதியில் வீடுகள் தீப்பிடித்து எரிவதையும், குடியிருப்பாளர்கள் தீயில் இருந்து தப்பிக்க தங்கள் செல்ல பிராணிகளுடன் வெளியேறும் காட்சிகளும் சமூகத் தளங்களில் வெளியாகியுள்ளது. (நி)

## ...ரத்தில் ஏற ...ளுக்குத் தடை




வுலா
க்கு
0.
யில்
யல்
ழல்
நில
மின்
விர

வேறு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், நில நடுக்கத்தை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, எவரெஸ்ட் சிகரத்தில் ஏறச் சுற்றுலா பயணிகளுக்குத் தடை விதித்து சீன அரசு உத்தரவிட்டுள்ளது. (நி)

# இஸ்ரோவிற்கு புதிய தலைவர்

(டில்லி)

இந்திய விண்வெளி ஆய்வு மையம் எனப்படும் இஸ்ரோ பெங்களூரை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுகிறது. இது விண்வெளித்துறையில் அமெரிக்கா, ரஷ்யாவுக்கு சவால் அளிக்கும் வகையில் பல்வேறு சாதனைகளை இந்திய விண்வெளி ஆய்வு மையம் செய்து வருகிறது.

இந்நிலையில் இஸ்ரோவின் தற்போதைய தலைவராக சோம்நாத் உள்ளார். இவரது பதவிக்காலம் அடுத்த வாரத்துடன் முடிவடைய உள்ள நிலையில் புதிய தலைவராக வி. நாராயணனை (தமிழகம் குமரி மாவட்டம் ) மத்திய அரசின் நியமனக்குழு தேர்வு செய்துள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி இஸ்ரோத்தலைவராக வி.நாராயணன் பொறுப்பேற்கவுள்ளார். இவர் இஸ்ரோவின் Liquid Propulsion Systems மையத்தின் இயக்குனராக தற்போது உள்ளதுடன் இவர் இஸ்ரோவில் பல் வேறு முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)



# டுபாயில் நடந்த கார் விபத்து

## நடிகர் அஜித்குமார் உள்ளே இருந்தாரா?




(டுபாய்)

நடிகர் அஜித் கார் விபத்தில் சிக்கியதாக சமூக வலைத்தளங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத நடிகராக இருப்பவர் தான் நடிகர் அஜித் குமார்.

இவர் நடிப்பில் இன்னும் சில தினங்களில் விடாமுயற்சி திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

அஜித்குமார் சினிமாவை போல் கார் ஓட்டுவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

அந்த வகையில், இவர் இந்த ஆண்டு நடைபெறவுள்ள சர்வதேச அளவிலான பார்முலா கார் பந்தயத்தில் பங்கேற்கவுள்ளார். இதற்காக அண்மைக் காலமாக டுபாயில் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில், பயிற்சி செய்து கொண்டிருக்கும் பொழுது நடிகர் அஜித் குமாரின் கார் வேகத்தில் எதிர்பாராத விதமாக தடுப்பு சுவரின் மீது பலமாக மோதி பலமுறை சுழன்று நின்றது.

இந்த விபத்தில் அஜித் குமாருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. அவருக்கு சிறிய காயம் கூட ஏற்படவில்லை என அஜித் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காரின் முன்பகுதி முற்றிலும் சேதமானது. விபத்துத் தொடர்பான காட்சிகள் இணையத் தளங்களில் வெளியாகியுள்ளது.

இதனைப் பார்த்த அஜித் ரசிகர்கள் பெரும் அதிர்ச்சிக் குள்ளாகியுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன உளைச்சலால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்

## இலங்கையில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

மன உளைச்சல் காரணமாக சிறுவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் கம்பஹா மாவட்டத்தில் அதிகரித்து வருவதாகவும், இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் இந்திரா மல்வான மாவட்ட சுகாதாரத் துறையில் உள்ள பிரச்சினைகளை முன்வைத்து இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சிறுவர்களிடையே மனச்சோர்வு ஒரு ஆபத்தான நிலை. இங்கே தீவிரம் தற்கொலை. கடந்த 2024 ஆம் ஆண்டு கம்பஹா மாவட்டத்தில் இவ்வாறு தற்கொலை செய்த 290 சிறுவர்கள் பதிவாகியுள்ளனர். இது 2023ஆம் ஆண்டை விட அதிகமாகும்.

நாட்டின் சனத்தொகையின் பிரகாரம் கம்பஹா மாவட்டத்தில் அதிக சனத்தொகை காணப்படுவதனால் இம்மாவட்டத்தில் அதிகளவு சிறுவர் தற்கொலைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கம்பஹா மாவட்டத்தில் எச்.ஐ.வி யால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், அம்மை நோயும் அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்தார். (ஙி)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 280 | 350 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 120 | 220 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 850 | 1100 | 1000 | 800 |
| தக்காளி | 400 | 350 | 400 | 350 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 220 | 150-180 | 200 |
| கோவா | 180 | 200 | 250 | 250 | 300 |
| கரட் | 200 | 280 | 250 | 300 | 400 |
| பூசணி | 150 | 140 | 160 | 130 | 200 |
| புடோல் | 250 | 300 | 250 | 250 | 200 |
| வாழைக்காய் | 120 | 140 | 150 | 120-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 350 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 800 | 700 | 600 | 500-600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 300 | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 350 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 600-700 | 400 |
| லீக்ஸ் | 420 | 380 | 300 | 330 | 400 |
| பீற்றூட் | 600 | 400 | 550 | 400 | 600 |
| கறிமிளகாய் | 900 | 700 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 400 | 350 | 400 | 350-400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 300 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 120 | 70 | 150 | 60-80 | 150 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 170 | 100-180 | 180-230 |
| இராசவள்ளி | 500 | 800 | 650 | 750 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 700 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 90 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 80 | 200 |

# இன்று ஒரு தகவல்

297



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## முட்டை ஓட்டுத்தத்துவம்

அப்பா மின்சார பல்ப் உடைந்து போய் விட்டது வேறு ஒன்று வாங்கி மாட்ட வேண்டும் என்றான் மகன். சரி போய் புதிதாக ஒன்று வாங்கிக் கொண்டு வா என்றார் அப்பா. பணத்தை வாங்கிக் கொண்டு போய் அவன் பல்ப் வாங்கிக் கொண்டு வந்தான். அதனை தன்னுடைய தந்தையிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கி மாட்டினார். மகன் தந்தையைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டான். ஏன் அப்பா இந்த பல்ப் உடையவில்லை என்று கேட்டான். இது என்னடா கேள்வி நாம் கீழே போடவில்லை அதனாலே அது உடையவில்லை என்றார்.

அப்பாவினுடைய புத்திசாலித்தனம் அவ்வளவு தான். ஆனால் பையன் கேட்டது அந்த அர்த்தத்தில் இல்லை. அந்த மின்சார பல்ப் கண்ணாடியின் கனம் எவ்வளவு இருக்கும். ஒரு அரை மில்லிமீற்றர் கனம் தான் இருக்கும்.

அவ்வளவு சிறிதாக இருக்கின்ற கண்ணாடிக் குமிழை ஹோல்டரில் மாட்டும்போது நமது விரலாலே அழுத்திப் பிடித்துத் திருக வேண்டி இருக்கிறது. அப்படி செய்யும் போது அது உடைவது இல்லை. நமது விரலை தாங்கிப் பிடிக்கிற அளவுக்கு அதற்கு எவ்வளவு தைரியம் வந்தது என்று தெரியவில்லை. இது தான் பையன் கேட்ட கேள்வியினுடைய அர்த்தம்.

இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு விஞ்ஞான அறிவு அதிகம். அதனாலே இப்படி எல்லாம் கேள்வி கேட்பார்கள். அப்பாவிற்கு தெரியுமா? என்று சோதிப்பதற்காக. இந்த மாதிரி சோதனைகளுக்கு எல்லாம் இந்தக் காலத்து அப்பாக்கள் எல்லாம் தயாராக இருக்க வேண்டும். இல்லை என்றால் பையன் அலட்சியமாக நினைத்து விடுவான்.

மின்சார பல்ப் கண்ணாடி மெல்லியதாக இருந்தாலும் நாங்கள் அழுத்திப் பிடிக்கும் போது அது உடையாமல் இருக்கக் காரணம் நாம் இயற்கையினுடைய ஒரு தத்துவத்தை அதில் பயன்படுத்தி இருக்கின்றோம். அது என்ன இயற்கையினுடைய தத்துவம்.

அது தான் முட்டை ஓட்டுத்தத்துவம். அது இயற்கை உருவாக்கிய தத்துவம். ஆதிகாலத்திலேயே இயற்கை இந்த தத்துவத்தை உருவாக்கி விட்டது. அதாவது பறவைகளுடைய முட்டை ஓடு எப்படி இருக்கிறது, அதனுடைய கனம் எப்படி இருக்கும், மின்சார பல்ப் மாதிரி தான் மிகவும் மெல்லியதாகத் தானே இருக்கும். பறவைகள் இனவிருத்திக்காக முட்டை போட வேண்டும்.

அந்த முட்டை எப்படி இருக்க வேண்டும். இயற்கை கொஞ்சம் யோசித்து பார்த்தது. முட்டை ஓடு ரொம்ப கனமாக, தடிமனாக இருந்தால் உள்ளே வளருகின்ற குஞ்சு வெளியிலே வர முடியாமல் போய்விடும்.

அதே நேரத்தில் அது மிகவும் மெல்லியதாக இருந்தால் தாய்ப்பறவைகள் அதன் மேல் உட்கார்ந்து அடைகாக்கும் போது உடல் எடை தாங்க முடியாமல் அதன் முட்டைகள் உடைந்து போய்விடும்.

முட்டை பலமாகவும் இருக்க வேண்டும். பலம் இல்லாமலும் இருக்க வேண்டும். குஞ்சு அதை உடைத்துக் கொண்டு வெளியே வர வேண்டும். தாயாலே அது உடையக் கூடாது. ஒரே நேரத்திலே அது உறுதியாகவும் உறுதி இல்லாமலும் முட்டை ஓடு அமைய வேண்டுமென்றால் அது எப்படிச் சாத்தியம். இது கொஞ்சம் குழப்பமாவும் கொஞ்சம் நமக்கு புரியாதது போலவும் இருக்கின்றது. அதனாலே தான் இதை தத்துவம் என்று சொல்கின்றோம்.

முட்டை ஓட்டுத்தத்துவம் இயற்கை கண்டுபிடித்த ஒரு அபூர்வமான அமைப்பு. அதுதான் முட்டை வடிவம். இது தாய்ப்பறவை முட்டை போடுவதற்கு ஏற்ற வடிவம். ஒரு குறிப்பிட்ட சிறு பரப்பிலே அளவுக்கு அதிகமான விசை செலுத்தப்படுவதில்லை. அதனாலே முட்டையுடைய வடிவம் தான் அந்த உறுதிக்கு காரணம். இது எப்பேற்பட்ட தத்துவம். இதை தான் மின்சார பல்ப் செய்யும் போது நாம் காப்பி அடிச்சிருக்கின்றோம்.

பொதுவாக வகுப்பிலே காப்பி அடித்தால் தான் முட்டை போடுவது வழக்கம். நாம் முட்டையையே காப்பி அடித்திருக்கின்றோமே இது எப்பேற்பட்ட காப்பி. ஒரு ஆசிரியர் வகுப்பிலே மாணவர்களை பார்த்து ஒரு கேள்வி கேட்டார். கோழி முட்டை இடுமா? முட்டை போடுமா? என்று கேட்டார். ஒரு பையன் எழுந்து பதில் சொன்னான். கோழி முட்டை இடும் சேர். போடாது சேர் என்றான். ஏன் போடாது என்றார் ஆசிரியர். போட்டால் உடைந்து விடும் சேர் என்றான் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சள் நோய்த் தாக்கத்தினால் உளுந்துச் செய்கை பாதிப்பு

## வவுனியா விவசாயிகள் கவலை

(வவுனியா)

**பல ஏக்கர் நிலப்பரப்பில் உளுந்துச்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்துக்கு பின்னரான காலப் பகுதியில் ஏற்பட்ட மஞ்சள் நோய் தாக்கத்தினால் உளுந்துச் செய்கையில் விளைச்சல் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்துள்ள விவசாயிகள் அதனைக் கட்டுப்படுத்த ஏதுவான முறைகள் இல்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.**



வவுனியாவில் பயிர்ச் செய்கைகளில் ஒன்றாக உளுந்துச் செய்கை காணப்படுகின்ற போதிலும் இம்முறை மஞ்சள் நோய் தாக்கத்தினால் விளைச்சல் குறைவதற்கான வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ள னர்.

உளுந்துக்கு விலை நிர்ணயம் இல்லாமையாலும் தாம் செலவு செய்யும் பணத்தை கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படும் நிலையில் இவ்வாறு நோய் தாக்கங்களும் தொடர்ந்து வருவதனால் நாம் எதிர்வரும் காலங்களில் உளுந்துச் செய்கையை கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 5650 கெக்டெயரில் உளுந்து பயிரிடப்பட்டுள்ளதாகவும் மஞ்சள் நோய் தாக்கம் பயிர்களில் ஏற்பட்டுள்ள நிலையில் விவசாயிகளுக்கு அதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (8)



# அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(கண்டாவளை)

2025 ஆம் ஆண்டு அபிவிருத்தியின் பொருத்தமான கிராமத்தைத் தெரிவு செய்தலும் முன்னுரிமைப்படுத்தலும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்களில் இருந்தும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து ஆறுமுகத்தான் குளம் கிராம, தண்ணிமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் குறித்த வேலைத்திட்டமானது நேற்று முன்தினம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி மணிவண்ணன் உமாமகள் தலைமையில் ஆறுமுகத்தான் குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் முக்கியமாக வீதிப் போக்குவரத்து, விவசாயம், கல்வி, வாழ்வாதாரம், காணி, நன்னீர் மீன்பிடி, அடிப்படை வசதிகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக எவ்வகையான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகள் இருக்கின்றன என்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டிருந்தன.

குறித்த விடயங்கள் தொடர்பாக பொதுமக்கள் தங்களுடைய தேவைகள், அபிலாசைகளை தெரிவித்ததோடு ஒவ்வொரு துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் தங்களுடைய கருத்துக்களை கூறியிருந்தார்கள். (8-315)

### விவசாயத்தை பாதுகாக்க

# குரங்குகளுக்கு கூடு அமைத்த விவசாயி

(தருமபுரம்)

குரங்குகளினால் பல விவசாய உற்பத்திகள் அழிவடைகின்றன. இதனால் விவசாயிகள் பலர் தமது உற்பத்தியில் நஷ்டமடைகின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சி திருவையாறு இரண்டாம் பகுதியைச்சேர்ந்த விவசாயி ஒருவர் தனது உற்பத்தியை அழிக்க வரும் குரங்குகளை பிடிப்பதற்கான கூடு ஒன்றினை அமைத்து அதனுள் குரங்குகளைப் பிடித்து வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.



குரங்குகளினால் பல விவசாயங்கள் அழிவடைந்துள்ளதாகவும் இதனால் விவசாயம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் குறித்த விவசாயி தெரிவித்தார். (8-316)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி புதுக்குடியிருப்பில் கையெழுத்துப் போராட்டம்

(வவுனியா)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் கையெழுத்துப் போராட்டம் நேற்று புதன்கிழமை காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் கையெழுத்துப் போராட்டம் பல்வேறு தரப்பினரதும் பேராதரவுடன் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும், புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.



குறித்த கையெழுத்து போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஜீவராசா , வர்த்தக சங்கத் தலைவர் த.நவநீதன், கலைஞர் மாணிக்கம் ஜெகன், போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், வர்த்தக சங்கத்தினர், பாடசாலை மாணவர் கள் என்பலரும் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர். (8-299)

# மரையினை இறைச்சியாக்கிய நபர் ஒருவர் கைது

## புதுக்குடியிருப்பில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு காட்டினுள் அத்துமீறி உள்நுழைந்து பாரிய மரை ஒன்றினை வெடி வைத்து இறைச்சியாக்கி கொண்டிருந்த ஒருவரை புதுக்குடியிருப்பு வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு மண்ணகண்டல் ஒதுக்கக் காட்டினுள் அத்துமீறி உள்நுழைந்து கட்டுத்துவக்கால் உயிரினங்களை அச்சுறுத்தி மரை ஒன்றினை வெடி வைத்து இறைச்சியாக்கும் போது புதுக்குடியிருப்பு பகுதி வன அதிகாரி தலைமையின் கீழ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் திணைக்களத்தினரால் சுற்றி வளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தினைச் சேர்ந்த இளைஞர் இதன்போது கைது செய்யப்பட்டதோடு மரை இறைச்சியும் மரை சுடுவதற்கு பயன்படுத்திய கட்டுத் துவக்கும் கைப்பற்றப்பட்டது.

தொடர்ந்து மேலதிக நடவடிக்கைகளுக்காக வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் சந்தேக நபர் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை திணைக்களத்தினர் முன்னெடுத்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 677





வந்தியத்தேவன் சிறிது திகைத்துவிட்டு, "பின்னே துக்கமில்லாமல் இருக்குமா? ஸ்திரீகள் எல்லாருமே இதயமற்றவர்களாக இருப்பார்களா?" என்றான்.

"அந்தக் கொடும்பாளூர் பெண் ஓடையில் விழுந்து உயிரை விடப் பார்த்தாளாமே? அது உண்மையா? அவளை யார் எடுத்துக் காப்பாற்றினார்கள்?" என்று கேட்டாள்.

உடனே வானதிக்கு நேர்ந்த ஆபத்தைக் குறித்து வந்தியத்தேவனுக்கு ஞாபகம் வந்தது. அவளுடைய கதி என்ன ஆயிற்றோ என்ற நினைவில் மூழ்கி வந்தியத்தேவன் கேள்விக்குப் பதில் சொல்லாமலிருந்தான்.

நந்தினி குரலைக் கடுமைப்படுத்திக்கொண்டு, "சரி அதையெல்லாம் பற்றி நீர் ஒன்றும் சொல்லமாட்டீர் எனக்குத் தெரியும். ஆதித்த கரிகாலர் கடம்பூர் மாளிகைக்கு வராதபடி நீர் தடுக்கப் போகிறீரா?" என்று கேட்டாள். "தடுப்பதற்குப் பிரயத்தனம் செய்வேன்" என்றான் வந்தியத்தேவன். "உம்மால் அது முடியாது என்று நான் சொல்கிறேன்."

"என்னால் முடியும் என்று நானும் சொல்லவில்லை. தேவி! பிரயத்தனம் செய்வேன் என்று தான் சொன்னேன். இளவரசர் ஒன்று செய்ய நினைத்துவிட்டால், அதை மாற்றுவது எளிதன்று!" "ஆதித்த கரிகாலரின் இயல்பை நீர் நன்றாய் அறிந்து கொண்டிருக்கிறீர்."

"என்னைவிட அதிகமாகத் தாங்கள் அறிந்திருக்கிறீர்கள்." "நல்லது நான் எவ்வளவுதான் சொன்னாலும் நீர் என் கட்சியில் சேரமாட்டீர். என் எதிரியின் கட்சியில் தான் இருப்பீர். அப்படித்தானே?" "அம்மணி! தங்கள் எதிரி யார்?" "என் எதிரி யார்? பழையாறை இளவரசி தான்! வேறு யார்?"

"அது தங்கள் மனோ கற்பனை, தேவி! தங்களுக்கு ஓர் உண்மையை முக்கியமான உண்மையை, தெரிவிக்க விரும்புகிறேன்"

"போதும், போதும்! நீர் உண்மை என்று சொல்ல ஆரம்பித்தால் அது வடிகட்டின கோட்டைப் பொய்யாயிருக்கும். எனக்குத் தெரியாதா? உமது உண்மையை நீரே வைத்துக் கொள்ளும்!" என்று நந்தினி குரோதத்துடன் கூறிவிட்டுக் கையைத் தட்டினாள். ரவிதாஸன் முதலியவர்கள் உடனே நெருங்கி வர ஆரம்பித்தார்கள். வந்தியத்தேவன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தான் சரியாக உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை என்பதை உணர்ந்தான். இந்த ராட்சஸி என்னைக் கொன்று விடும்படி தான் இவர்களுக்குக் கட்டளையிடப் போகிறாள். கடவுளே! எத்தகைய சாவு! போர்க்களத்தில் எதிரிகளுடன் போராடி வீர மரணம் அடையக் கூடாதா? இப்படியா என் தலையில் எழுதியிருந்தது?

ரவிதாஸன் கோஷ்டியார் அருகில் வந்து சூழ்ந்து கொண்டார்கள். இரையை நெருங்கிய ஓநாய்க் கூட்டம் உறுமுவது போல் அவர்கள் உறுமிக் கொண்டிருந்தார்கள்.

"ராணி! தாங்கள் என்ன தான் சொன்னாலும் இவன் வழிக்கு வரமாட்டான் என்று எனக்குத் தெரியும். தாங்கள் உடனே புறப்படுங்கள். இவனை நாங்கள் இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் பலி கொடுத்து விட்டுக் கிளம்புகிறோம்" என்றான் ரவிதாஸன்.

"மந்திரவாதி! ஜாக்கிரதை! என்னுடைய விருப்பம் அதுவன்று. இவரை உங்களில் யாரும் எதுவும் செய்யக்கூடாது.

இவரை எவனாது தொட்டால் அவனை நானே இந்தக் கத்தியினால் வெட்டிக் கொன்று பழிவாங்குவேன்!" என்று நந்தினி கர்ஜித்தாள்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## வெப்பமும் குளிர்ச்சியும்



காலையில் கதிரவன் தோன்றினான். தன் ஒளியைப் பரப்பி உலகம் முழுவதையும் விளக்கம் செய்தான். கடல் நீர்ப்பரப்பின் மீதும் அவன் கதிர்கள் விரிந்தன. கடலை அழகுபடுத்த வேண்டும் என்று கதிரவன் தன் ஒளியை மேன்மேலும் அதன் மீது பாய்ச்சினான்.

வெப்பத்தைத் தாங்க முடியாமல் கடல் முகம் சுருங்கியது. அதன் அலைகள் தளர்ச்சியடைந்து சிறுத்தன.

தான் அன்போடு கதிர் பாய்ச்சிக் கடலை அழகு படுத்த முயலும் போது அது ஏன் முகத்தைச் சுருக்கிக் கொள்கிறது என்று கதிரவனுக்குப் புரியவில்லை.

"கடலே, என்ன கோபம்?" என்று கேட்டான். கடல் பதில் பேசவில்லை.

பதில் சொல்லக் கூட விருப்பமில்லாத அளவு தன் மீது கடல் கோபமாய் இருக்கக் காரணம் என்ன என்று சிந்தித்தான் கதிரவன். அப்போது காற்றரசன் அந்தப் பக்கமாக வந்தான்.

கதிரவன் சிந்தனையைக் கண்டு காரணம் கேட்டான். கடலின் போக்கைப்பற்றிக் கதிரவன் கூறினான். அதைக் கேட்டபின் காற்றரசன் சொன்ன செய்தி கதிரவனை மேலும் துன்பப்படச் செய்தது.

நீ வரும்போது தான் கடல் தன் அலைகளைச் சுருக்கிக் கொள்கிறது. இரவில் நிலவரசன் வரும் போது எவ்வளவு மகிழ்ச்சி கொள்ளுகிறது தெரியுமா? பொங்கிப் பொங்கி அலைகளை உயரச் செலுத்தி ஆனந்தம் கொள்ளுகிறது. உன்னுடைய நட்பை அது விரும்பவில்லை. நிலவரசனைத்தான் அது விரும்புகிறது என்று காற்றரசன் கூறினான்.

மறுநாள் நிலவரசன் பகலிலேயே வெளியில் வந்தான். கடல், அலைகளைப் பெரிதாக்கிக் கொண்டது. கதிரவன் நிலவரசனை நேருக்கு நேரே பார்த்தான். "நிலாத் தம்பி, இந்தக் கடல் உன்னைக் கண்டு பொங்குவதும் என்னைக் கண்டு பொங்காததும் ஏன்?" என்று கதிரவன் கேட்டான்.

அண்ணா, என் கதிர்கள் குளிர்ச்சியாயிருப்பதால் கடலுக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. அதனால் ஆனந்தமாகப் பொங்குகிறது. உன் கதிர்கள் வெப்பமாக இருப்பதால் சூடு தாங்காமல் சுருங்குகிறது என்றான் நிலவரசன். காரணமறிந்த கதிரவன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

கருத்துரை:- இனிய சொற்களே மகிழ்ச்சியைத் தரும் கடுஞ்சொற்கள் மகிழ்ச்சியைத் தராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்மீது உனக்கே நம்பிக்கை இல்லையென்றால், கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை..!
~ விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒற்றுமையைக் குழப்பவல்ல கிருமிகளை அறியுங்கள்

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுகூடிக் கதைப்பதற்கான ஏற்பாடுகள் நடப்பதான செய்திகள் வெளிவந்துள்ளன.

ஒற்றுமை பற்றி யார் எப்போது பேசினாலும் அது நல்ல விடயம். அதை வரவேற்க வேண்டும்.

ஆனால் தமிழ்த் தரப்புகளின் ஒற்றுமை பற்றி இன்று நேற்று மட்டுமல்ல, நீண்ட நெடுங் காலமாகப் பேசப்படுகிறது.

ஒற்றுமைக்கான கடும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் அவை அனைத்தும் தோல்வியில் முடிந்து போயின.

இறுதியாக 2015ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவை எடுத்த முயற்சிகள் தோற்றதன் பின்னர், தமிழ்த் தரப்புகளை ஒற்றுமைப் படுத்துவதில் இறங்கினால், அது சுயகௌரவத்துக்கு கேடாக அமையும் என்பதே அனுபவப் பாடமாயிற்று.

இதில் தமிழ்த் தரப்புகளிடையேயான ஒற்றுமையைக் குழப்பியவர்கள் வேறுயாருமல்ல, அவர்கள் நம்மவர்கள் என்ற உண்மையும் அதில் சிங்களத் தரப்புக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதும் இங்கு உரத்துக் கூறப்பட வேண்டும்.

அதிலும் தமிழ்ச் சமூகத்தில் இருக்கக் கூடிய சிவில் அமைப்புகளில் சில அமைப்புகளும் சிலரும் தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்பட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர் என்ற உண்மையையும் நாம் மறந்துவிடலாகாது.

இவ்வாறு தமிழ் இனத்தின் ஒற்றுமைக்கு ஈனமாக இருக்கின்ற குறிப்பிட்ட சில தமிழ் சிவில் அமைப்புகளும் அதில் இருக்கக்கூடிய சிலரும் யாருடைய நிகழ்ச்சி நிரலில் இயங்குகிறார்கள் என்பது தெரியாவிடினும் அவர்களின் முழுநோக்கமும் தமிழ் இனத்துக்கு நல்லது நடந்துவிடக்கூடாது என்பதுதான்.

இந்த உண்மை இதர தமிழ் சிவில் அமைப்பினருக்குத் தெரிந்திருந்தாலும் அவர்கள் மௌனித்திருப்பதையே தங்களின் பிரதான கடமையாகக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடுகின்ற முயற்சியை ஆரம்பித்திருப்பது நல்லது.

ஆனால் அந்த ஒற்றுமையை ஏற்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் முதலில் கூடி ஆராய வேண்டும்.

இங்கு கூடி ஆராய்தல் என்பதில் தமிழ் இனப்பற்றுடைய தனிநபர்களிடம் ஆலோசனை பெறுவதும் அடங்கும்.

ஆனால் எக்காரணம் கொண்டும் தமிழ் சிவில் சமூகம் என்பதை அழைத்துவிடாதீர்கள் – கிட்டவும் நெருங்கவிடாதீர்கள்.

ஏனெனில் உங்கள் ஒற்றுமையைக் குழப்புகின்ற கிருமிகள் அங்குதான் உள்ளன.

# 5 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி விவசாயிகளிடமிருந்து கொள்வனவு

## கமத்தொழில் பிரதி அமைச்சர்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு விவசாயிகளிடமிருந்து 5000 மெற்றிக் தொன் வரையிலான நெல்லை மாத்திரமே அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது என கமத்தொழில் மற்றும் கால்நடை அபிவிருத்திப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இம்முறை 45 இலட்சம் மெற்றிக்தொன் நெல் விளைச்சல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் 3 இலட்சம் மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் போது வருடம் முழுவதற்கும் உரியவாறாக அமையும் வகையில் நெல்லுக்கு உத்தரவாத விலை பேணப்படாத காரணத்தால் விவசாயிகளும், நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வர்த்தகர்கள் விலையை தீர்மானித்துக் கொள்ளும் நிலை காணப்படுகிறது என்றார். (ம-7)

## வினாத்தாள் கசிவு ஆசிரியர் இடைநீக்கம்

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளில் தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள் கசிந்த விவகாரம் தொடர்பில் ஆசிரியர் ஒருவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கல்விச் செயலாளர் தெரிவித்தார்.

6 மற்றும் 7ஆம் தரங்களுக்கான பரீட்சை வினாத்தாள் கசிந்த விவகாரம் தொடர்பிலேயே குறித்த ஆசிரியர் உடன் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வவுனியாவில் கிராம சேவகர் பதவி இடைநிறுத்தம்

வவுனியா பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமையாற்றிய கிராம சேவகர் ஒருவர் தனது கல்விச் சான்றிதழை உறுதிப்படுத்தத் தவறியமையால் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு கிராம சேவகராக நியமனம் பெற்ற ஒருவர் தனது மூன்று வருட நிறைவில் பதவியினை உறுதிப்படுத்த வேண்டும். குறித்த பதவியினை மூன்று வருடம் கடந்தும் தாமதாக கடந்த வருடமே குறித்த கிராம அலுவலர் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்போது குறித்த கிராம அலுவலர் நியமனத்திற்காக சமர்ப்பித்த க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றை பரீட்சைத் திணைக்களத்தால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இதனையடுத்து குறித்த கிராம அலுவலர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். (ம-7,250)

## ஆட்டோ விபத்து இருவர் உயிரிழப்பு

மாத்தளை - பல்லேபொல - மடவல வீதியின் நாராங்கமுவ பிரதேசத்தில் முச்சக்கரவண்டி யொன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முச்சக்கரவண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டுவிலகிப் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உக்குவெல பிரதேசத்தைச்சேர்ந்த 75 வயதுடைய பெண் ஒருவரும் 65 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் குழந்தை யொன்று காயமடைந்துள்ளது.

காயமடைந்த குழந்தை மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஹோட்டலில் வாங்கிய கறி பணிஸ் உள்ளே லைட்டர் பாகங்கள்

பாணந்துறையில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட கறி பணிஸ் ஒன்றிற்குள் லைட்டரின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பாணந்துறை அருக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த மஞ்சுள பெரேரா என்பவர் நேற்றுக் காலை தனது இரண்டு மகன்களுக்கும் கொடுப்பதற்காக இரண்டு கறி பணிஸ்களை ஹோட்டலில் இருந்து கொள்வனவு செய்துள்ளார்.

அங்குஅவரதுஇளைய மகன் சாப்பிட்ட கறி பணிஸில் லைட்டரின் உலோகப் பகுதி காணப்பட்டது.

அவ்வேளையில் மஞ்சுள பெரேரா இது தொடர்பில் பிரதேசத்திற்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்த போதிலும், இன்று(நேற்று) விடுமுறையில் இருப்பதாகத் தெரிவித்த அவர், பாணந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குத் தனது பிரச்சினையைத் தெரிவிக்குமாறும் கூறினார்.

பாணந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத் திற்குச் சென்று அவர் இதனைக் கூறியபோதும் தனது முறைப்பாட்டை ஏற்காமல் திருப்பி அனுப்பியதாக மஞ்சுள தெரிவித்தார்.

மேலும் இந்த ஹோட்டல் பாணந்துறை மாநகர சபைக்குட்பட்ட ஹோட்டல் எனவும், எனவே இது தொடர்பில் மாநகர சபையுடன் இணைக்கப்பட்டுள்ள பொது சுகாதாரப் பரிசோதகரிடம் தெரிவிக்குமாறும் அங்குள்ள அதிகாரிகள் அவரிடம் தெரிவித்துள்ளனர். (ம-7)

## செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு அறிவுறுத்தல்

2024 பொதுத் தேர்தல் மற்றும் அது தொடர்பான தேர்தல்களில் வருமானம் மற்றும் செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதன்படி இதுவரை வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத 1042 வேட்பாளர்கள் மற்றும் 197 கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றைத் தேர்தல்கள் ஆணைக்குழு பதில் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர், பொறுப்பான அதிகாரிகள் மேற்படி விசாரணைகள் தொடர்பான சாரங்களைத் தயாரித்து சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் ஊடாக அனைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் - பகுதி – I

08



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இச் சீர்செய்கைக்குப் பின் மொத்த வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை 5092 ஆக அதிகரித்தது.

வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது: கொழும்பு (329), கம்பஹா (417), களுத்துறை (277), கண்டி(377), மாத்தளை(168), நுவரெலியா (186), காலி(272), மாத்தறை (224), அம்பாந்தோட்டை(160), யாழ்ப்பாணம்(243), கிளிநொச்சி (40), மன்னார்(54), வவுனியா (63), முல்லைத்தீவு(41), மட்டக்களப்பு(146), அம்பாறை(231), திருகோணமலை(136), குருநாகல் (378), புத்தளம்(186), அநுராதபுரம்(228), பொலநறுவை (102), பதுளை(239), மொனறாகலை(121), இரத்தினபுரி(258), கேகாலை(216), மொத்தம் 5092 ஆகும்.

இதன் பிரகாரம் தற்போது நாடு பூராக இருக்கின்ற 341 உள்ளூராட்சி அதிகார சபைகளும் (அட்டவணை-1) (குறிப்பு- 2018ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்னர் உள்ளூராட்சி அதிகார சபைகளின் எண்ணிக்கை 341 ஆக அதிகரித்தது) மொத்தம் 5092 வட்டார உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உறுப்பினர் வட்டாரங்கள், இரு உறுப்பினர்கள் வட்டாரங்கள், மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்கள் எனப் பிரிக்கப்பட்டன. இது மீளாய்வுக் குழுவினால் திருத்தம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

மீளாய்வுக்குழு பல உள்ளூராட்சி அதிகார சபைகளின் பல் அங்கத்தவர்கள் தொகுதிகள், வட்டாரத்தின் எல்லைகள், வட்டாரத்தின் பெயர்கள், இலக்கங்கள் மற்றும் எழுத்துக்களில் மாற்றங்கள் செய்தது. வட்டாரங்களுக்கு பெயரிடுவதில் பல எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிட்டது. கல்முனை மாநகர சபையின் வட்டாரங்களுக்கு பெயரிடுவதில் இரு சமூகங்களுக்கிடையே ஒற்றுமை காணப்படாததால் வட்டாரங்களின் பெயர்கள் வட்டாரம் 01, வட்டாரம் 02 என்ற விதத்தில் பெயரிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

மீளாய்வுக்குழுவினால் அட்டவணை -2இல் காட்டியவாறு மாவட்ட ரீதியில் பிரிக்கப்பட்டிருந்த வட்டாரங்கள் 4746 தனி உறுப்பினர் வட்டாரங்களாகவும் 167 இரு உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் 04 மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் பிரிக்கப்பட்டன. மொத்தமாக 4917 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த 4917 வட்டாரங்களிலிருந்து 5092 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். 341 உள்ளூராட்சி அதிகார சபைகளில் 98 உள்ளூராட்சி அதிகார சபைகளில் 171 பல் உறுப்பினர்கள் கொண்ட வட்டாரங்கள் உள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளில் பல் உறுப்பினர்கள் கொண்ட வட்டாரங்கள் எதுவும் இல்லை.

உள்ளூராட்சிச் சபைகள் 2018 அட்டவணை-1

| மாவட்டம் | A | B | C | மாவட்டம் | A | B | C |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 5 | 5 | 3 | மன்னார் | - | 1 | 4 |
| கம்பஹா | 2 | 5 | 12 | மட்டக்களப்பு | 1 | 2 | 9 |
| களுத்துறை | 1 | 3 | 13 | அம்பாறை | 2 | 1 | 17 |
| கண்டி | 1 | 4 | 17 | திருகோணமலை | 1 | 1 | 11 |
| மாத்தளை | 2 | - | 11 | அனுராதபுரம் | 1 | - | 18 |
| நுவரெலியா | 1 | 2 | 9 | பொலன்னறுவை | 1 | - | 7 |
| காலி | 1 | 2 | 17 | குருநாகல் | 1 | 1 | 19 |
| மாத்தறை | 1 | 1 | 15 | புத்தளம் | 1 | 1 | 10 |
| அம்பாந்தோட்டை | 1 | 1 | 10 | பதுளை | 2 | 1 | 15 |
| யாழ்ப்பாணம் | 1 | 3 | 13 | மொனராகலை | - | - | 10 |
| கிளிநொச்சி | - | - | 3 | இரத்தினபுரி | 1 | 2 | 14 |
| வவுனியா | 1 | - | 4 | கேகாலை | 1 | - | 11 |
| முல்லைத்தீவு | - | - | 4 | மொத்தம் | 29 | 36 | 276 |

A- மாநகர சபை, B- நகரசபை, C- பிரதேச சபை

அட்டவணை -2 2017ல் மீளாய்வின் பின் வட்டாரங்கள் பிரிக்கப்பட்டிருந்த விதம்

| மாவட்டம் | A | B | C | D | மாவட்டம் | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 280 | 20 | 3 | 329 | மன்னார் | 40 | 7 | - | 54 |
| கம்பஹா | 389 | 14 | 0 | 417 | மட்டக்களப்பு | 142 | 2 | - | 146 |
| களுத்துறை | 259 | 9 | - | 277 | அம்பாறை | 220 | 4 | 1 | 231 |
| கண்டி | 359 | 9 | 0 | 377 | திருகோணமலை | 122 | 7 | - | 136 |
| மாத்தளை | 156 | 6 | - | 168 | அனுராதபுரம் | 222 | 3 | - | 228 |
| நுவரெலியா | 150 | 18 | - | 186 | பொலன்னறுவை | 94 | 4 | - | 102 |
| காலி | 268 | 2 | - | 272 | குருநாகல் | 368 | 5 | - | 378 |
| மாத்தறை | 220 | 2 | - | 224 | புத்தளம் | 178 | 4 | - | 186 |
| அம்பாந்தோட்டை | 146 | 7 | - | 160 | பதுளை | 195 | 22 | - | 239 |
| யாழ்ப்பாணம் | 243 | - | - | 243 | மொனராகலை | 113 | 4 | - | 121 |
| கிளிநொச்சி | 40 | - | - | 40 | இரத்தினபுரி | 240 | 9 | - | 258 |
| வவுனியா | 49 | 7 | - | 63 | கேகாலை | 212 | 2 | - | 216 |
| முல்லைத்தீவு | 41 | - | - | 41 | மொத்தம் | 4746 | 167 | 4 | 5092 |

A- ஒற்றை உறுப்பினர் வட்டாரங்களின் எண்ணிக்கை, B- இரு உறுப்பினர்களின் வட்டாரங்களின் எண்ணிக்கை, C- மூன்று உறுப்பினர்களின் வட்டாரங்களின் எண்ணிக்கை D- மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை

### கலப்பு விகிதாசாரம் 60:40

2012ஆம், 22ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டத்தின்படி 70:30 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் கலப்பு முறையாக அதாவது தொகுதி (வட்டார) ரீதியாக அது 70 வீதமான உறுப்பினர்களையும் விகிதாசார அடிப்படையில் 30 சத வீதமான உறுப்பினர்களையும் தெரிவு செய்வது என்பதான சட்ட ஏற்பாடாகவும் இருந்தது.

இதற்கிடையில் உள்ளூராட்சி சபைகளில் 25சதவீதம் பெண்களுக்கு வாய்ப்பு வழங்கும் 2016 ஆம் முதலாம் இலக்க சட்டம் நடை முறைக்கு வந்தது. ஏற்கனவே 70:30 என தீர்மானிக்கப்பட்ட கலப்பு விகிதாசாரம், 2017ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல்கள் திருத்தச் சட்டம் அதனை 60:40 என்ற கலப்பு விகிதாசாரமாக மாற்றியமைத்தது.

### உள்ளூராட்சி அதிகார சபைகளின் எல்லைகளில் உள்ள பிரச்சினைகள்

நாட்டில் உள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளின் எல்லைகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வரையறுக்கப்பட்டிருந்தாலும் பல உள்ளூராட்சி அதிகார சபைகளின் எல்லைகள் வர்த்தமானி அறிவித்தலில் தெளிவற்ற தன்மையுடன் காணப்படுவதோடு நிலத்திலும் அடையாள மிடப்படவில்லை. இதனால் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கு இரு உள்ளூராட்சி அதிகாரசபைகள் உரிமை கோருவதைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் குறிப்பிட்ட தொகையான கிராம உத்தியோகத்தர் அலகுகளைக் கொண்ட பிரதேசமே உள்ளூராட்சி அதிகார சபைகள் ஆகும். இவை சரியாக நிலத்தில் குறிக்கப்படாது இருப்பதாலேயே உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கிடையே எல்லைப் பிரச்சனைகள் இருப்பதாக அறிய முடிகிறது.

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய நிறுவப்பட்டுள்ள பிரதேச சபைகளின் நிர்வாக எல்லையானது கிட்டத்தட்ட "பிரதேச செயலகங்களின்" எல்லைகளுக்குச் சமனானதாகும். ஒரு குறித்த பிரதேசத்தினுள் ஒரு மாநகரசபையோ அல்லது ஒரு நகரசபையோ செயற்படுமாயின் அதன் (மாநகரசபை, நகரசபை) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த எஞ்சியுள்ள பிரதேசம் பிரதேச சபையாகப் பிரகடனம் செய்யப்படுகின்றது.

உதாரணமாக தென்மராட்சிப் பிரதேச செயலகமானது 60 கிராம சேவகர் பிரிவுகளையும் 130 கிராமங்களையும் கொண்டமைந்துள்ளது. மேலும் இப்பிரதேசம் சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேசசபை என்ற இரு உள்ளூராட்சி அலகுகளை உள்ளடக்கி உள்ளது. இதில் சாவகச்சேரி நகரசபை 11 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி 31.29 சதுரகி.மீ பரப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. மிகுதி 49 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட 200. 90 சதுரகி.மீ பரப்பு சாவகச்சேரி பிரதேச சபைக்குள் அடங்குகிறது.

இவ்வாறு ஒரு பிரதேச செயலகப்பிரிவினுள் நகரசபை மற்றும் பிரதேசசபை, வரும்போது சில சந்தர்ப்பங்களில் ஒரு கிராம சேவகர் பிரிவு இரு துண்டாக்கப்பட்டு ஒரு பகுதி நகரசபைக்குள்ளும் மற்றைய பகுதி பிரதேசச் சபைகளுக்குள்ளும் போய்விடுகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர்...

அமைச்சர் விஜித ஹேரத்திடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, மருத்துவர் பவானந்தராஜா ஆகியோர் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடல் ஒன்றை நேற்றுப் பாராளுமன்ற அலுவலகத்தில் நடத்தினர்.

இதன்போது வடக்கு மாகாணத்தில் ஐந்து தொழிற்பேட்டை நிலையங்களை அமைப்பதற்காக காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது ஆர்வமுள்ளவர்கள் இலங்கை முதலீட்டுச் சபையின் ஊடாகத் தங்கள் செயற்றிட்டங்களை முன்வைக்க முடியும் எனவும் பதிலளித்தார்.

அதேபோன்று நீண்ட காலமாக புலம்பெயர்ந்து நாட்டுக்கு வர முடியாது இருக்கும் தமிழர்கள் தாங்கள் நாட்டுக்கு வர விரும்புவது தொடர்பான ஆர்வத்தைப் பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி அமைச்சருக்குத் தெரியப்படுத்தினார். (ம-7)

## தேராவில்...

விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து மாவீரர் தினத்தில் தமது பிள்ளைகளுக்கான நினைவேந்தலைச் சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்துப் போராட்டம் ஒன்று நேற்றுப் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தேராவில் மாவீரர் துயிலுமில்லப் பணிக்குழு உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையவர்கள் இணைந்து குறித்த கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் காணியின் பெரும்பகுதி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையில் அந்த அபகரிக்கப்பட்ட துயிலுமில்லக் காணிக்கு முன்பாக குறித்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டினுடைய புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதி வழங்கியதைப் போன்று தங்களுடைய பிள்ளைகளின் கல்லறைகள் இருக்கின்ற குறித்த காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்துத் தருமாறு கோரி குறித்த கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ம-7)

## அலங்காரங்...

பஸ்களின் உரிமையாளர்களுக்கு மூன்று மாதங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும் பதில் பொலிஸ்மா அதிபருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மேற்படி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகத் தெரியவருகிறது. (ம-7)

## அனைத்துப்...

பெறுமதிசேர் வரிக்குறைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்வைத்து அரசாங்கத்துக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் நேற்றுப் புதன்கிழமை கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது. (ம-7)

## சந்தையில்...

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாடு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற அடிப்படையில் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், சந்தையில் சிவப்பு அரிசிக்கு மட்டுமே தட்டுப்பாடுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 20 கிலோ அரிசியைக் கடந்த அரசாங்கம் மக்களுக்கு விநியோகித்தது.

சிவப்பு அரிசி பயன்படுத்தாத மக்களுக்கும் சிவப்பு அரிசி விநியோகிக்கப்பட்டது. இதன் காரணமாகவே சிவப்பு அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது என்றார். (ம-7)

## அச்சுவேலி...

இதில் உயிரிழந்த இளைஞரின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## பயங்கரவாத...

மையை அடுத்து 1979ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

எனினும் நாட்டில் சுமார் 30 ஆண்டுகளாக நிலவிய யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், தொடர்ந்தும் குறித்த சட்டம் அமுலில் உள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கும் ஊடகத்துறையினர் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் எதிராகக் குறித்த பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் அனைவரும் அறிந்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குள்ளும் அதற்கு வெளியிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

அவ்வாறாயின் குறித்த சட்டத்தை நீக்குதல், புதிய சட்டத்தை கொண்டு வருதல் அல்லது திருத்தத்தை மேற்கொள்ளுதல் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரியிருந்தார்.

இதன்படி இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு, நாட்டில் யுத்தம் நிலவிய காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் குறித்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தரப்பினரின் எண்ணிக்கை தொடர்பில் அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அத்துடன் அவர்களில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை, புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டோ ரின் எண்ணிக்கை உள்ளிட்ட விடயங்களுக்கும் பதிலளிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எதிர்காலத்தில் சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கு அமைய குறித்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அரசாங்கம் அடையாளம் கண்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வினவியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பல தரவுகளின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டியுள்ளமையினால், அதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுவதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவரினால் வினவப்பட்டுள்ள கேள்விகளுக்கு அமைய, 1979ஆம் ஆண்டு முதல் சகல தரவுகளையும் ஆராய வேண்டிய தேவைப்பாடு காணப்படுவதாகவும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 5710
O 7 6 4 9 3 8
அத சம்பத
O 4 9 3 8
சீட்டிழுப்பு இலக்கம் 285

தன நிதானய
திகதி - 2025.01.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1740
T 30 32 54 56 T
90941

மெகா பவர்
திகதி 08/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2058
R 20 06 21 36 59

லக்கி 7 VIP
திகதி 2025.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 536
F 2 1 6 6 1 1 F

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3952
சீட்டிழுப்பு திகதி 08.01.2025
S 16 17 61 64
S

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 1019
விருச்சிகம் 26 42 43 61 விருச்சிகம்
21369 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.01.2025 வெற்றி வாரம் 418
V 4 0 1 4 9 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,758,435.20
59349

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2684
சீட்டிழுப்பு திகதி 2025.01.08 தினம் புதன்கிழமை
27 51 54 68 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,744,750.40

சனிதா
திகதி 08.01.2025 வெற்றி வாரம் 4845
36 40 55 60 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,208,635.60
81411

ஜயோதா Jayoda
திகதி 2025.01.08 வெற்றி வாரம் 2093
03 06 12 39 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,238,378.40

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4396
சீட்டிழுப்பு திகதி 08.01.2025 தினம் புதன்கிழமை
23 35 42 48 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
249473

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 11 39 50 54 66
1860
08.01.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,239,511.40

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2510
சீட்டிழுப்பு திகதி: 2025.01.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,116,192.00
06 13 55 68 O
697922


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**யோக்கட் கொள்வனவுகள்**

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.

48/= ~~90/=~~

**Happy Supermarket**
உரும்பிராய்

**+94 76 800 65 00**

(526)



**V2 VISA SERVICES**
**கனடா** Visit Visas
077 77 20 322
077 77 19 322
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1982)


# உயிரிழந்த 11 டொல்பின்கள் மீட்பு



வில்பத்து தேசிய பூங்கா கடல் எல்லைக்குட்பட்ட கொல்லன் கனத்த பகுதியில் 11 சாதாரண குப்பி டொல்பின்கள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம் வனவிலங்கு, கால்நடை வைத்திய அலுவலக அதிகாரிகள் உயிரிழந்த டொல்பின்களின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன் போது வலையில் சிக்கியதால் அவை இறந்ததாக மருத்துவர்கள் ஊகிக்கின்றனர்.

மேலும் அவற்றின் மரணத்தை உறுதிப்படுத்துவதற்காக டொல்பின்களில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் பேராதனை கால்நடை மருத்துவ பீடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)


**கல்வி நிலையத்திற்கு கட்டடம் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றினது கணினி ஆய்வுகூடத்தினை அமைப்பதற்கு யாழ். நகரின் பிறவுண் வீதி அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் வணிகக் கட்டடம் அல்லது வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு : **077 378 4053** (2963)



**விசேட சலுகைகள்**

வெளிநாடுகளுக்கான பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில்
25 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
◆ London 1350/=
◆ Germany 1850/=
◆ France 1750/=
மற்றைய நாடுகளுக்கு விசேட சலுகைகள்

**Thirumurugan ComNet**
321, K.K.S Rd, Jaffna.
077 755 4528
(2969)



**வேலைவாய்ப்பு (Only Females)**

- **முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்** (ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியவர்)
- **சிங்கள ஆசிரியர்** (ஆரம்ப எழுத்துப் பயிற்சி எழுதக் கூடியவரும் உரையாடக் கூடியவரும்)
- **கணினி நிலைய ஆசிரியர்** (photoshop, page maker, Corel draw நன்கு தெரிந்தவர், பழக விரும்பு பவர்களுக்கு 3 மாத காலப் பயிற்சிகள் வழங்கப்படும்)

புத்தூர், யாழ்ப்பாணம், இணுவில், தெல்லிப்பளை போன்ற இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றது.
**நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி 11.01.2025 ம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை நடைபெறும்.**
(உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்க வேண்டும்)
நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :
சிவபதி, கே.கே.எஸ் றோட், இணுவில்.

**077 377 0524**
(2948)



KBK

**A/L 2025/2026 DAY CLASS**

King of Accounts (ACCOUNTING)
உங்கள் ஆசிரியர்

**MR.BALAKAJEN SLTS**
B.com(Jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in-Edu (OUSL), M.com (Hons) Acc.spl

புதிய தேர்ச்சிகள் ஆரம்பம் :
11.01.2025 Saturday

NEC - பெருமாள் கோயில் அருகில்
ST ECONOMICS - மீசாலை
KBK - கொழும்புத்துறை
KBK - கந்தர்மடம்
KBK - ZOOM (இலங்கை முழுவதும்)

நேர அட்டவணைகளுக்கு
(TAMIL AND ENGLISH MEDIUM)
**077 452 0043** (522)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய் பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1983)

**076 825 7716** (ஆகாஸ்)



**Technicians தேவை**

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆண்டெனா விற்பனை மற்றும் சர்விஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆண்டெனா பிட்டிங்கில் நன்கு அனுபவமுள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ டிரைவிங் செய்யக்கூடிய Technicians ஒருவர் உடன் தேவை. தங்குமிடம் உண்டு, சம்பளம் மற்றும் கமிஷன் உட்பட Rs.100,000/= வரை சம்பாதிக்க முடியும். தொடர்பு கொள்ளவும்.

**T.ராஜ்குமார் : 077 771 0785** (525)


# மரண அறிவித்தல்



மலர்வு
21.01.1932

உதிர்வு
05.01.2025

## குமாரசாமி குணநாயகம்

**Retired Civil Engineer**
**(Irrigation Department, Road Development Authority and Road Development Department)**

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், மாத்தளை, மட்டக்களப்பு, கல்முனை, கிளிநொச்சி, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகக் கொண்டிருந்த குமாரசாமி குணநாயகம் அவர்கள் 05 ஜனவரி 2025 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நாகமுத்து தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன் - சிகாமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் சத்தியதேவி, சத்தியபவானி, சத்தியவாணி, திலகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தம்மிக்க, இராமிலன், லம்போதரன், ரஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷேக், சோனாக்ஷி, பிரணவன், அபிராமி, வைஷ்ணவி ஆகியோரின் பேரனும் காலஞ் சென்றவர்களான பரராஜசிங்கம், புண்ணியமூர்த்தி மற்றும் சொர்ணம்மா, கமலாம்பிகை, லிங்கநாயகம், கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மைப்பிள்ளை, சுப்பிரமணியம், கனகம்மா, மருதையினார் மற்றும் தயாவதி, மங்கையற்கரசி, சகுந்தலாதேவி காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், ஸ்ரீபத்மநாதன், சுவாமிநாதன், ஜெயநாதன் மற்றும் குணநாதன், விஜயலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜனவரி 8ம், 9ம் திகதிகளில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையிலும் ஜனவரி 10ம், 11ம் திகதிகளில் அன்னாரின் ஆனந்தபுரம், கிளிநொச்சி இல்லத்திலும் பார்வைக்காக வைக்கப்பட்டு ஜனவரி 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணியளவில் ஈமக்கிரியைகளைத் தொடர்ந்து கிளிநொச்சி இந்து மாயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. (2968)

தொடர்புகளுக்கு:
0094 71 415 2042(சத்தியதேவி)

*தகவல்:*
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org